20.06.2013

# உதய சூரியன்

*Source for reading hunters*

களம் - 01. சூரியன் -42 பக்கம்: 32 விலை: 20/=



## அரச அதிகாரத்துக்கு ஆட்பட்டு அகதியாகிப்போன

# பூமாரியம்மன்



## முழங்காலை மறைத்த ஆசிரியை

# முழந்தாளிடப்பட்டார்



ஆலய நிர்வாகி
மு. பாலகிருஷ்ணன்.

# அரச அதிகாரத்துக்கு ஆட்பட்டு அகதியாகிப்போன பூமாரியம்மன்



சுமார் 80 வருடங்களுக்கு மேலாக பூஜை, புனஸ்காரங்கள், சாஸ்திர சம்பிரதாயங்களுக்குட்பட்டு நிகழ்ந்தேறிக்கொண்டிருந்த பூமாரியம்மன் ஆலயம் இன்று இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. அந்த அம்மனையே நம்பி இருந்த மக்கள் கதிகலங்கிப் போயிருக்கின்றனர். அரசின் அதிகாரத்தால் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இத்தனை வருடம் இன, மத, மொழி பேதமின்றி அனைத்து மக்களாலும் வணங்கப்பட்டு வந்த பூமாரி அம்மன் இன்று ஆலயமில்லா அனாதையில் அடைக்கப்பட்டுள்ளாள் என மனத்துடன் கதைக்க ஆரம்பிக்கிறார் ஆலய நிர்வாகி மு. பாலகிருஷ்ணன்.

**இவ் ஆலயத்தை அகற்றும் நடவடிக்கை நியாயமானதா?**

இதை எப்படி நியாயம் என்று சொல்வது? தாய் வயிற்றில் இருக்கும் கருவை வலுக்கட்டாயமாக கலைப்பதற்கு சமமான நடவடிக் கையே இது. கரு கலைந்தபின் குழந்தை எங்கிருந்து உருவாகும்? அப்படித்தான் அம்பாளின் சந்நிதியும் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. ஒரு மதம் இல்லாதொழிக்கப்படுமானால் குறித்த இனத்தின் அழிவின் ஆரம்பமும் அதுதான்.

**ஆலயம் அகற்றப்பட்ட விடயத்தில் உங்களின் மனநிலை எவ்வாறு உள்ளது?**

அந்த உணர்வுகளை வார்த்தைகளால் சொல்ல முடியாது. கருவறை அம்மனை அகற்றி எடுக்கும் அந்த நிமிடம் கோயில் வளாகம் மயான கோலமாகத்தான் இருந்தது. அனைத்து மதத்தினரும் இன, மொழி பேதமின்றி வந்து வணங்கிவிட்டுப் போகும் ஒரு ஆலயமாகத்தான் இருந்தது. அந்த நிலையில் இந்தக் கோயில் அகற்றப்பட்டது எல்லோருக்கும் அதிர்ச்சியையே தந்துள்ளது.

**அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இந்த இடம் எடுக்கப்படுவதாகக் கூறப்பட்டாலும் இதன் மறைமுகக் காரணம் என்ன?**

நாட்டின் அபிவிருத்திக்கு என்றுதான் இந்த இடத்தை கேட்டார்கள். இந்த இடத்தை எதற்கு பயன்படுத்தப் போகிறார்கள் என்பது அவர்களுக்கு மட்டும்தான் தெரியும். குழப்படியைக் கண்டால் தூர விலகு என்பது போல் அவர்கள் கேட்ட இடத்தை கொடுத்து நாங்கள் ஒதுங்கிவிட்டோம். இந்த இடத்தை கொடுக்காமல் இருந்தால் நாட்டின் அபிவிருத்திக்கு எதிரானவர்களாகக் கருதப்படுவோம். அப்படி ஒரு நிலை எங்களுக்கு வேண்டாம்.



**ஏனைய ஊடகங்கள் உதவி செய்தனவா?**

நிச்சயமாக இந்த விடயம் தமிழ் ஊடகங்களுக்கு அறிவிக்கப்படுவதற்கு முன் பிறமொழி ஊடகங்களிலேயே அறிக்கைகள் வெளியாகின. கடந்த ஒரு வருடகாலமாக இப் பிரச்சினை இருந்தாலும் அதை ஊடகங்களுக்கு வெளியிடுவதற்கான வாய்ப்பு எங்களுக்கு கிடைக்கவில்லை. உதவிகளுக்கு பதிலாக மிரட்டல்களே அதிகமாகின. இருந்தும் சகோதர மொழி அதிகாரியிக்க ஒருவரினாலேயே இந்த விடயம் ஊடகங்களுக்கு தெரியவந்தது.

**அமரர் தொண்டமான் தொடங்கி ஸ்ரீரங்கா வரையிலான அரசியல் தலைவர்கள் இந்த கோயிலுக்கு வந்துள்ளார்கள். அப்படி இருந்தும் ஏன் இந்த விடயத்தில் எந்தவொரு அரசியல் தலைவரும் முன்மாதிரியாக நடந்துகொள்ளவில்லை?**

அமரர் தொண்டமான் இருந்த காலத்தில் எங்களுக்கு கிடைத்த ஒத்துழைப்பு இன்று அவருடைய சந்ததியினரால் கிடைக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். எல்லோரும் கோயிலுக்கு வருவதோடு நின்றுவிட்டார்களே தவிர, இந்த விடயத்தில் தலையிட யாரும் விரும்பவில்லை. கோயில் இடிக்கப்படும் போது அதையாவது வந்து பாருங்கள் என பிரபா கணேசனிடம் முறையிட்டு அவரை அழைத்து வந்தோம். அவரினாலேயே அந்தக் காட்சியை பார்க்க முடியவில்லை.

தொடர்ச்சி 26 ஆம் பக்கம்

எஸ்.மேகலா - எஸ்.பிரியா

# வடக்கு மக்களின் மலையகத் தமிழர்களின் பிரச்சினை வேறு

## இந்தியாவுக்கு தெளிவுபடுத்திய இ.தொ.கா.

இலங்கையைப் பொறுத்தவரை இந்தியா மிக நெருங்கிய நட்பு நாடு. அரசியல், கலை, கலாசாரம் மற்றும் மத ரீதியாக நெருக்கமான உறவைக் கொண்ட நாடு. அத்தோடு இலங்கையின் அரசியல் செயற்பாடுகளில் ஆதிக்கத்தை செலுத்தும் அதேவேளை இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பிரதான பங்காளியாகவும் செயற்படுகின்றது.

அவ்வாறு பார்க்கின்றபோது இந்திய வம்சாவளி மக்களாகிய எமக்கு அது பெருமை சேர்க்கும் விடயமாகும். இருந்தபோதும் இந்திய அரசானது தமது நாட்டில் இருந்து இங்கு குடியேறி ஆண்டாண்டு காலமாக பின்தங்கி வாழ்கின்ற இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் மேம்பாட்டுக்கு கரிசனையுடன் செயற்பட்டிருக்கின்றதா என்ற கேள்வியும் எழுகிறது.

தற்போதைய இந்திய அரசானது இலங்கையில் ஒட்டுமொத்தத் தமிழர் பிரச்சினையையும் ஒன்றாகவே பார்க்கின்றது. இதில் வடக்கு கிழக்கு தமிழர்களின் பிரச்சினையை விட மலையகத்தில் வாழ்கின்ற இந்திய வம்சாவளி மக்களுடைய பிரச்சினைகள் வேறுபட்டது என்பது தெளிவுபடுத்தப்படாத நிலைமையே காணப்படுகின்றது.

இந்தியாவை பொறுத்தவரை இலங்கையில் வாழ்கின்ற இந்திய வம்சாவளி தமிழர்களின் மேம்பாட்டுக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். ஆனால், அந்த நிலைமை இல்லை. மாறாக இங்குள்ள இந்திய வம்சாவளி மக்களுடன் தொடர்பைப் பேண வேண்டும் என்பதற்காக மாத்திரம் ஒரு சில வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. அதாவது புலமைப் பரிசில், பாடசாலை நூலகங்களுக்கு புத்தகம் வழங்கல், கண்காட்சி நடத்துதல், இரட்டை குடியுரிமை வழங்கல், சுற்றுலா ஏற்பாடு செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.



இந்தியாவைப் பொறுத்தவரை ஏனைய கட்சிகளைவிட காங்கிரஸ் கட்சி இந்திய வம்சாவளி தமிழர் விடயத்தில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட வேண்டும். காரணம் இலங்கையில் வாழ்கின்ற இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கு இந்திய காங்கிரஸின் கிளையாக இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை - இந்தியன் காங்கிரஸின் ஊடாகவே முதன் முதலில் அரசியல் முகவரி வழங்கப்பட்டது. பின்னர்தான் அது இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக மாற்றம் பெற்றது. ஆக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தாய் கட்சி இந்திய காங்கிரஸேயாகும்.

இந்த உறவின் ஊடாகவே அண்மையில் இராஜதந்திர மரபுகளுக்கு அப்பால் அண்மையில் ஆளும் கட்சியான இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியை சந்திப்பதற்கான வாய்ப்பு இ.தொ.கா.வுக்கு கிடைத்தது.

கடந்த 7 ஆம் திகதி டில்லியில் அமைந்துள்ள இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் இந்திய காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி பிரதம மந்திரி அலுவலக இணை அமைச்சர் நாராயணசாமி நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதேசிகன், முன்னாள் மாநில அமைச்சர் கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கலந்துகொள்ளவிருந்தபோதும் அவரின் தலைவர் திடீர் சுகவீனம் அடைந்ததால் சமுகம் தரவில்லை. அதேபோல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம், ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான், மத்தியமாகாண அமைச்சர் அனுஷியா சிவராஜா, பாராளுமன்ற உறுப்பினர் பீ.இராஜதுரை, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மதியுகராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.



இச் சந்திப்பில் பேசிய சோனியா காந்தி தான் (25) இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் தனது தலைவர் ராஜீவ் காந்தியுடன் இலங்கை வந்ததாகவும் அப்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானை சந்தித்ததாகவும் நினைவு கூர்ந்ததுடன் இந்திய காங்கிரஸுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் இடையிலான தொடர்பை மேலும் வலுப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டதாக அமைச்சர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை சம்பந்தமாக கருத்து தெரிவித்த போது அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானும் பிரதி அமைச்சர் முத்துசிவலிங்கமும் மலையக மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தமாக தெளிவுபடுத்தினர்.

(தொடர்ச்சி 5 ஆம் பக்கம்)

**தேவை**

சம்பளம் 20,000/=, 28,000/=, 30,000/= வரை. எங்கள் பிஸ்கட், சொக்லட், சவர்க்காரம், பாஸ்டா, டார், க்ளவுஸ், சீமெந், சீட் ஆகிய தொழிற்சாலைகளில் உற்பத்தி, பொதியிடல், லேபல் ஒட்டுதல், மேற்பார்வை, களஞ்சியப்படுத்தல் பிரிவிற்கு 18–55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. உணவு, தங்குமிட வசதியுண்டு. நண்பர்கள் தம்பதியினர் குழுவாக இணைந்துக் கொள்ளப்படுவர்.

☎: 077-2523241, 077-7920278

**வேலை வாய்ப்பு**

சம்பளம் 18,000/=, 25,000/=, 40,000/= எங்கள் தனியார் துறை முகத்தில் கப்பல் வேலைக்கு 18–45 வயதுவரையான ஆண்கள் தேவை. உணவு தங்குமிட வசதி உண்டு. தொடர்புகளுக்கு. மெயின்ஸ்ரீட், அநுராதபுரம்.

☎: 077-3033803

# பிரச்சினைகளை எதிர் கொள்வது எப்படி?


வாழ்க்கைக்கு வழிசொல்லும் விழிப்புணர்வுத் தொடர் 40



உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் பிரச்சினை இருந்து கொண்டுதான் இருக்கிறது. மேலும், தினசரி புதிய பிரச்சினைகளும் வந்து கொண்டிருக்கின்றன. உடனடியாகத் தீர்க்க வேண்டிய பிரச்சினை. நாளை தீர்க்க வேண்டிய பிரச்சினை. சில நாள் அல்லது சில மாதங்கள் கழித்து தீர்க்க வேண்டிய பிரச்சினை என பிரச்சினைகளின் வகைகளைப் பிரித்து வைத்துக் கொண்டு, அதனை எதிர்கொண்டு தீர்க்க முயல வேண்டும்.

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் கடன் பிரச்சினை, தொழில் பிரச்சினை, குடும்பப் பிரச்சினை, தொழிலை வெற்றிகரமாகச் செய்யும்போது எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினை என அடுக்கடுக்காக வருகிறது என வருத்தப்பட்டார். ஆனால், அவர் பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாமல் முடங்கிவிடவில்லை.

கடன்காரர்கள் வந்தால் சளைக்காமல் பதில் கூறுவார். தொழிலாளர்கள் பிரச்சினையை சாதுரியமாகப் பேசி முடிப்பார். வாழ்க்கையே போராட்டம்தான் என்பார்.




**வெற்றி என்பது நிரந்தரம் அல்ல. தோல்வி என்பது இறுதியானது அல்ல. எனவே வெற்றி பெற்ற பின்னும் நம் பணியை நிறுத்தி விடக் கூடாது. தோல்வி அடைந்தாலும் முயற்சியைக் கைவிடக் கூடாது.**

******

**நம்மிடையே ஒரு தவறான கண்ணோட்டம்; நாம் எப்போதுமே இன்றைக்கு விட நாளைக்கு நமக்கு அதிகமான நேரம் இருக்கிறது என்று நினைக்கிறோம், நம்புகிறோம்.**

எந்தப் பிரச்சினை வந்தாலும் அதில் மூழ்கிவிட வேண்டாம். சதா பிரச்சினைகளை எண்ணிக் கொண்டிருந்தால் பிரச்சினை தீராது. ஒரு பிரச்சினையைத் தீர்க்க பல வழிகளை யோசிக்க வேண்டும். பிரச்சினை குறித்து அலசி ஆராய வேண்டும். எந்த முடிவு என தீர்மானம் செய்ய வேண்டும். அந்த முடிவை அடையும் வழிமுறைகளை யோசிக்க வேண்டும். இறுதியில் எந்த வழி சிறந்தது என ஆய்வு செய்து, அந்த வழியில் செல்ல வேண்டும்.

இதனை விட்டுவிட்டு, இந்தப் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என சும்மா இருந்து கொண்டு சிந்தித்துக் கொண்டிருந்தால், அந்தப் பிரச்சினையில் மூழ்க நேரிடும். பின்னர், அதிலிருந்து எழுந்துவருவது கடினமாக இருக்கும். குழப்ப நிலையிலிருந்து மீண்டு தெளிவான நிலையில் இருந்து கொண்டு பிரச்சினைகள் குறித்து யோசிக்க வேண்டும். தேவைப்பட்டால் பிறரின் ஆலோசனையைக் கேட்கலாம்.

நமது பழக்கங்களும் மனப்போக்கும் ஒரு புதிய பிரச்சினையைத் தொலைவில் நின்று பார்க்க முடியாமல், ஆராய முடியாமல் தடுக்கும்.

**உலகின் மிகச்சிறிய சர்வாதிகாரமான வார்த்தை எது தெரியுமா? அதெல்லாம் எனக்குத் தெரியாது.**

அடுத்து, நமது விருப்பு வெறுப்புகள் நம்மில் ஒரு பிடிவாதத்தை ஏற்படுத்தி விடும்.

**எதிரி இல்லையென்றால் நாம் வாழலாம்... ஆனால் வளர முடியாது.**

**நீ தடைகள் என்று நினைக்கும் எதையும் தடைகளாகக் கருதாதே. அது நிச்சயம் பெரிய தடைகளாக இருக்காது. அதை உடைத் தெறிந்து வெளியேறு. ஜெயிக்கலாம்.**



பிரச்சினைகளில் தடை ஏற்படும்போது சற்றுப் பின்வாங்கிப் புதிய உத்திகளையும், புதிய திட்டங்களையும் யோசிக்க வேண்டும்.

ஒரு துறவி தன் சீடர்களுடன் காட்டுவழியே நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது ஆறு ஒன்று குறுக்கே ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றைக் கடக்க வேண்டும் என முடிவு எடுத்தபோது, அங்குவந்த இளம்பெண் ஒருவர், சுவாமி எனக்கு நீச்சல் தெரியாது. என்னை ஆற்றைக் கடந்து அக்கரைக்கு கொண்டு செல்ல தாங்கள் உதவ வேண்டும் எனக் கேட்டார். அப் பெண் கூறியதைக் கேட்டதும் சீடர்களுக்குக் கோபம் வந்தது.

ஆனால் துறவி, நீ என் தோளில் அமர்ந்து கொள். உன்னை அக்கரைக்குக் கொண்டு சென்று விடுகிறேன் என பெண்ணிடம் கூறியதையடுத்து அப் பெண், துறவியின் தோளில் அமர்ந்து கொண்டார். துறவி தண்ணீரைக் கடந்து மறு கரையில் அப்பெண்ணை இறக்கிவிட்டு விட்டு, மீண்டும் நடக்கத் தொடங்கினார். சீடர்கள் கசமுசாவென பேசிக் கொண்டார்கள். சிறிது தூரம் சென்ற பின்னர் ஒரு சீடன், சுவாமி, நீங்கள் அப் பெண்ணை தோளில் சுமந்து சென்றது தவறு என எங்களுக்குப்படுகிறது என்றான்.

நான் அப் பெண்ணை அப்போதே கீழே இறக்கிவிட்டு விட்டேன். நீ இன்னுமா சுமந்து கொண்டிருக்கிறாய் எனத் துறவி கேட்டாராம். அதுபோல, நாம் பிரச்சினைகளை தேவையில்லாமல் நம் மனதில் வைத்துக்கொண்டு தடுமாறுகிறோம்.

சளைக்காத மனம் வேண்டும் என ஓர் அறிஞன் கூறுகிறான். பந்து விளையாட்டில், பந்தை எதிர்கொள்பவனே வெற்றி கொள்கிறான். அதுபோல பிரச்சினைகளை எதிர்கொள்பவர்களே வெற்றி பெறுகிறார்கள். வாழ்வின் மிக முக்கியமான பிரச்சினை - நாம் நம் வாழ்வில் அதிர்ஷ்டத்தைத் தோற்றுவிக்க முடியுமா என்பதுதான். முடியும் என பல ஞானிகள் கூறியுள்ளார்கள்.

ஒரு விஷயத்தைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொண்டு, வழி தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும்போது, ஒரு சிறு சம்பவம் நேருகிறது. உடனே நம் மனம் நமது பிரச்சினையுடன் அதை இணைத்து முடிவு காண்கிறது. சொல்லப் போனால் நமது மனம் பிரச்சினைக்கு என்ன தீர்வு என சிந்தித்த வண்ணம், எதிர்பார்த்த வண்ணம் உள்ளது. மனம் எதிர்பார்க்கும்போது, அது எதிர்பார்ப்பதே நிகழ்கிறது.

பிரச்சினைகளுக்கு விடை இருக்கும் என திடமாக நம்ப வேண்டும். நமது அன்றாட வாழ்வில் சிறு பிரச்சினைகள், பெரும் பிரச்சினைகள் என நமது வாழ்க்கை, பிரச்சினைகளால் நிரம்பியுள்ளது. பல சிறு பிரச்சினைகளுக்குச் சரியாக முடிவு எடுக்கும்போது, வாழ்க்கை பல சிறு வெற்றிகளால் அமைகிறது. சிறு வெற்றிகளை இணைத்து சாதனை என்ற மாலையை நாம் அணிந்து மகிழ்ச்சியுடன் வாழ்வோம்.

## உதயசூரியன் பயோடேட்டா



| | |
|---|---|
| பெயர் | எம். உதயகுமார் |
| பதவி | மத்திய மாகாண சபை உறுப்பினர் |
| தற்போதைய தொழில் | இ.தொ.கா.வின் (அவருடைய(?)) விசுவாசத்தை பெற உழைப்பது |
| நண்பர் கூட்டம் | இ.தொ.கா.விற்கு ''ஜம்ப்'' பண்ணி அதை பலப்படுத்தியவர்கள் (ஹி...ஹி... பார்த்து பார்த்து அலுத்து போன விடயம்) |
| எதிரிகள் | நான் கட்சி தாவ காரணமான அந்த (?) புல்லுருவிகள் (போட்டு கொடுப்பதில், வெட்டி விடுவதில் அவர்கள் ''சிங்''கங்கள் தானே?) |
| ஒரே மகிழ்ச்சி | ''உபதலைவர்'' பதவி கொடுத்து அவர் என்னை கௌரவப்படுத்தியது (அங்கு எல்லோரும் உபதலைவர் தானே). |
| மறக்க முடியாதது | நான் வளர்த்து விட்ட கட்சியே எனக்கெதிராக சதிசெய்த அந்த நாட்களை |
| பிடித்த விடயம் | சொந்தச் செலவில் சேவை செய்து இ.தொ.கா.விற்கு ''பாமாலை'' சூட்டுவது. (என்ன... விசுவாசம்) |
| அரசியலில் கற்றுக் கொண்டது | ''கையில் உண்டானால் காத்திருப்பார் ஆயிரம் பேர் (இல்லையேல்?) |
| இலட்சியம் | அடுத்த முறை எப்படியாவது மத்தியமாகாண தமிழ்க் கல்வி அமைச்சை கைப்பற்றுவது (எத்தனை பேர் போட்டி போடுவீங்க? அம்மணிக்கு ஆப்போ?) |

(யாவும் கற்பனை) - எம். நாசன்

03 ஆம் பக்கத் தொடர்ச்சி

மேலும் இந்திய அரசினால் இந்திய வம்சாவளி மக்களுக்காக மேற்கொள்ளப்படும் திட்டங்கள் மந்தகதியிலேயே நடைபெறுவதாகவும், மேலும் இந்திய அரசினால் மலையகத்திற்காக வழங்கப்பட்ட 4000 வீடுகள் அமைக்கும் வேலைத்திட்டமும் இன்னும் ஏட்டளவிலேயே காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்து இவ் விடயத்தை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு தமது அதிகாரிகளுக்கு சோனியா காந்தி பணிப்புரை விடுத்தார்.

அத்தோடு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தேவையான உதவிகளை வழங்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார். அதற்கு பதிலளித்த மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி இலங்கை அரசுக்கு இந்தியாவினால் வழங்கப்படவுள்ள 4000 கோடி ரூபா உதவித் தொகையில் ஒரு தொகையை இந்திய வம்சாவளி தமிழர்களின் நலநோம்புத் திட்டங்களுக்கு ஒருக்கீடு செய்யலாம் என கருத்துத் தெரிவித்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட சோனியா காந்தி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் கூறினார். அத்தோடு மலையக மக்கள் எதிர்நோக்கும் வீடில்லாப் பிரச்சினை சம்பந்தமாகவும், இரண்டு இலட்சம் வீடுகள் தேவைப்படுவதாகவும் சுட்டிக்காட்டி வீடுகளை அமைத்துத் தருமாறு கோரிக்கை முன்வைத்தபோது இதனை பரிசீலிப்பதாகவும் இந்திய காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி தெரிவித்ததாகவும் இனிவரும் காலங்களில் இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கை வகுப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களில் மலையக மக்கள் ஒரு புறம்பாக கவனிக்கப்படக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சரினால் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

இதுவரைகாலம் மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக இந்திய நாட்டின் அரசியல் தலைமைகளுக்கு உரிய தெளிவு இன்மையே மலையகத் தமிழர் சம்பந்தமான வேறுபட்ட தீர்மானங்களை எடுப்பதற்கு தடையாக இருந்தது.

இந்த சந்திப்பின் மூலம் இந்தியாவின் ஆளும் கட்சியான இந்திய காங்கிரஸின் தலைவி சோனியா காந்திக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இந்திய வம்சாவளி மக்கள் சம்பந்தமான பிரச்சினைகளை தெளிவு படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் இந்தியா இலங்கை தொடர்பான கொள்கை வகுப்பில் மலையக சமூகம் ஒரு தனியான சமூகமாக கவனத்திற் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மேற்கொண்ட இந்த முயற்சி பாராட்டத்தக்கது என்பதுடன் தமது தாய்க் கட்சி என்ற வகையில் இந்திய காங்கிரஸுடன் தொடர்ந்து சந்திப்புகளை மேற்கொண்டு தொடர்பை வலுப்படுத்துகின்ற போது அது மலையக மக்களுக்கு மேலும் நன்மை பயக்கும் விடயமாகவே அமையும்.

எஸ்.சந்திரமோகன்

## தபால் திணைக்கள சாரதி சேவைக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை தபால் திணைக்களத்தினால் சாரதி சேவை III ஆம் தரத்திற்கு நியமனம் வழங்கும் முகமாக போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு தகுதியான மலையக இளைஞர்கள் அனைவரையும் விண்ணப்பிக்குமாறு ஊவா மாகாண சபை உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணியின் நிதிச்செயலாளருமாகிய அ.அரவிந்தகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பதாரிகள் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அதில் குறைந்தது 02 பாடங்களிலாவது திறமைச் சித்தி பெற்றிருப்பது அவசியமாகும். கனரக (பஸ்) வாகனங்கள் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும். 3 வருடங்கள் சாரதியாக கடமையாற்றிய அனுபவமும் அதனை நிரூபிப்பதற்கான சான்றிதழும் தேவை.

இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஆகக் குறைந்தது 5 அடி 2 அங்குல உயரமும் (157 cm), 05.07.2013 ஆம் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவர்களாகவும் 45 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தோடு போட்டிப் பரீட்சைக்கான கட்டணமாக 400 ரூபாவை 05.07.2013 ஆம் திகதிக்கு முதல் ஏதாவது ஒரு தபால் காரியாலயத்தில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டுதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை தபால் மா அதிபர், தபால் தலைமைக் காரியாலயம், இல. 310, D.R.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தபால் திணைக்களத்தினால் சாரதி சேவை III ஆம் தரத்திற்கு சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை 2013 எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 05.07.2013 திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பணம் செலுத்திய பற்றுசீட்டின் பேரட்டோ பிரதியையும், விண்ணப்பப் படிவத்தின் பிரதியையும் தம்வசம் வைத்துக்கொள்வது உபயோகமாக இருக்கும்.

இப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியின் அட்டன் தலைமைக் காரியாலயம் உள்ளிட்ட அனைத்து பிராந்திய, மாவட்ட காரியாலயங்களிலும் மலையக மக்கள் முன்னணியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அமைப்பாளர்கள் மற்றும் மாவட்டத் தலைவர்கள் ஆகியோரிடம் பெற்றுக்கொள்ள முடியும்.


அதேவேளை இது தொடர்பான மேலதிக தகவல்களை எமது அனைத்து காரியாலயங்கள் மற்றும் பிரதேச அமைப்பாளர்களிடமிருந்தும், 051-4920300, 051-4920302, 051-2222793, 052-2223052, 055-2229838, 055-4928206, 077-3516116, 0777-727472 ஆகிய தொலைபேசி இலக்கங்களோடும் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும் முடியும்.

மலையக விண்ணப்பதாரிகள் அதிகளவில் அரச துறையில் உள்வாங்கப்படல் வேண்டும் என்ற சிந்தனையோடே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

தேவை
உங்களுக்கான தொழில் இதோ...!
10000 க்கும் மேற்பட்ட வேலை வெற்றிடங்கள்.
பிரதான தொழிற்சாலைகளான பிஸ்கட், பால்மா, கிளவுஸ், சொக்கலட் போன்றவற்றில் உற்பத்தி, லேபல், பொதியிடல், தரம் பிரித்தல், களஞ்சியப் பிரிவுகளில் வேலை வாய்ப்பு. நண்பர் குழுவினர் தொடர்பு கொள்ளலாம். வருகை தரும் நாளிலேயே வேலை...!
18-50 வயதான ஆண்/பெண்
சம்பளம் 18,000/= - 32,000/=
☎: 077-8508118, 077-0224156




கண்ணாமூச்சி




சூப்பர் ரூப்பர்




பாரது





படத்தைப் பார்த்து விடையைச் சொல்லுங்கள் பார்க்கலாம்...

## சிந்தனைத்துளிகள்

* சாதிக்கும் எண்ணம் சாகாமல் இருந்தால் சாதிக்கலாம்.
* ஆசை வாழ்வளிக்கும், பேராசை வாழ்வை அழிக்கும்.
* உலகம் எனும் கடலில் நீ ஒரு துளி.
* பணத்திற்கு பயத்தையும், தைரியத்தையும் கொடுக்கும் ஆற்றல் உண்டு.
* நல்லவரிடமும் நஞ்சுக் குணம் துளி உண்டு.

புதிர் BOX பகுதிக்கான உங்கள் விடைகளை 02 ஆம் பக்கத்தில் உள்ள எமது முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

## வார்த்தைப் புதிர் - 63



### இடமிருந்து வலம்

01. பெண்கள் விரும்பும் பூ. 03. இது மலரும்
06. கண்ணகி என்றால் நினைவுக்கு வருவது.
07. உலக நாயகன்.
09. பூமி என்பதன் ஒத்த சொல்.
11. இது வரும்போது பணிவு வரவேண்டும்.
14. 12 கொண்டது ஒரு---.
16. இது ஒட்ட உதவும். (ஆங்கிலச் சொல்)
20. உடலில் உள்ள ஓர் உறுப்பு.
21. இது அறியாமல் இருப்பது நல்லது.
23. தேங்காய் வெட்டும், தலையையும் வெட்டும்.
24. துவாய் என்றும் சொல்லலாம்.
26. பெட்டி அல்லது அடைப்பு என்பது. (குழம்பியுள்ளது)
28. கடிகாரச் சத்தம்.
29. வார நாட்களில் ஒன்று.
33. அவன் அல்ல.

### வலமிருந்து இடம்

19. யானையை அடக்க பயன்படுவது.
30. நம்மை நமக்கு காட்டுவது.
32. வீரவிளையாட்டு.

### மேலிருந்து கீழ்

01. பச்சை நிறத்தில் இருக்கும் ரத்தினக் கல்.
02. கொடி ஏற்ற பயன்படுவது.
13. கையில் பத்து, காலில் பத்து இருப்பது.
15. இவர்கள் இந்தியாவில் வாழும் ஒரு இன மக்கள்.
16. அநியாய வட்டி.
17. குதிரை மேல் பயணிப்பது.
20. உடல் உறுப்புகளின் ஒன்று.
21. கற்பூரம்.
22. விலங்குகளுக்கு இருப்பது.
23. பயம் 25. ஜனங்கள்.
27. தொலைபேசியில் இலக்கங்களை அழுத்துவது ஆங்கிலத்தில்.

### கீழிருந்து மேல்

05. முடி. 08. இது நடனமாடும் பறவை.
10. வாயால் ஊதுவது.
12. காதல்தேசம் கதாநாயகி.
18. வயிற்றில் இருப்பது.
19. பாசம்.
26. இது போதை தரும்.
31. எலி வளையானாலும்... வளை வேண்டும்.
33. ரூபாய்க்கு முந்தைய நாணயம் (இந்தியாவில்)
34. வாகனம்.

# முழங்காலை மறைத்த ஆசிரியை முழந்தாளிடப்பட்டார்





மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற சொற்றொடரை ஒவ்வொருவரும் மறந்திருக்க முடியாது. 'குரு' (ஆசிரியர்) என்பவர்கள் எமது வாழ்க்கையின் வழிகாட்டிகள். ஒவ்வொரு மனிதனும் முன்னோக்கி செல்வதற்கு உறுதுணையாக, ஊன்றுகோலாக நிற்பவர்கள் தான் ஆசிரியர்களாவர்.

ஆசிரியர்களின் வழிகாட்டலினால் வாழ்க்கையில் நல்ல நிலைக்கு உயர்வடைந்தவர்கள் 'குருவை' என்றுமே மறந்ததில்லை. இன்னும் சிலர் குருவின் வழிகாட்டலை பின்பற்றாமல் தவறான பாதைகளில் சென்று வாழ்க்கையை சீர்குலைத்துக்கொண்டும் உள்ளனர்.

அவை அப்படியிருக்க, 'குருவாக' இருக்கவேண்டியவர்களில் சிலர் மாணவர்களின் வாழ்க்கையை சீர்குலைத்த சம்பவங்கள் வெளிநாடுகளில் மட்டுமன்றி இங்கும் இடம்பெறாமல் இல்லை.

ஆசிரியர் என்பதை (ஆசிரியர்) என்பர் 'ஆசி' என்றால் 'தவறு' 'ரியர்' என்றால் 'திருத்துபவர்;' என்று பொருள்படும். ஆதலால்தான்; திருக்குறளில் முதல் குறளே 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு' என்று வள்ளுவர் எழுதியுள்ளதுடன் 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என ஔவையார் ஆத்திசூடியில் பாடியிருக்கின்றார்.

இவ்வாறாக மனித வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாத மனித சமூகத்தின் முதுகெலும்பாக விளங்குகின்ற 'ஆசிரியரை' சர்வதேச ஆசிரியர் தினத்தை நிறுவி, கௌரவப்படுத் தப்படுகின்றனர். இவை மனித நாகரிகத்தின் வளர்ச்சிப்படிகள் என்றால் அது மிகையாகாது.

கல்வியை கற்பதற்கு முன்னர் 'ஒழுக்கம்' முக்கியமான பங்கு வகிக்கின்றது. ஒருவரின் நடத்தையைக் கொண்டே அவர் கற்ற பாடசாலையை சிலர் கண்டுபிடித்துவிடுவார்கள். இன்றேல், அவர் எந்தவொரு பாடசாலைக்கும் செல்லவேயில்லை என்ற தீர்மானத்தை எட்டிவிடுவார்கள்.

அதனடிப்படையில் தான் ஒவ்வொரு பாடசாலைகளிலும் மாணவர்களின் ஒழுக்கத்திற்கு பொறுப்பாக ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்படுவார். அவர் மாணவர்களின் ஒழுக்கத்தில் மிகவும் கண்டிப்பாகவே நடந்துக்கொள்வார். வளர்ச்சியடையும் நாகரிகம் மாணவர்களின் வாழ்க்கையை சீர்குலைத்துவிடக்கூடாது என்பதிலும் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள்.

அதனால்தான் சில பாடசாலைகளில் ஞாயிறு பாடசாலைக்கு (அறநெறி, தாம் பாசல், ஞாயிறு பாடசாலை) செல்வது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான கட்டுப்பாடுகள் இருந்தும் மாணவர்கள் சிலரும் பெற்றோரும் தங்களுடைய சேஷ்டையை காண்பிக்காமல் இல்லை.

அவ்வாறானதொரு சம்பவமே புத்தளம் நவகத்தேகம நவதோய பாடசாலையில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது. மாணவிகளின் ஆடைகளை பரிசோதித்த ஒழுக்க பாடத்திற்கான ஆசிரியை முழங்கால் தெரியும் வகையில் சீருடையை அணிந்துவரவேண்டாமென அறிவுறுத்தி அதற்கான தீர்வையும் கூறியுள்ளார்.

ஆசிரியையின் சொல்லை கேட்காத அந்தப் பாடசாலையைச் சேர்ந்த மாணவிகள் சிலர் முழங்கால்கள் தெரியும் வகையில் தொடர்ந்தும் சீருடையை அணிந்து வந்துள்ளனர். இந்நிலையில் மாணவிகளுக்கு நல்ல பாடம் கற்பிக்க நினைத்த ஆசிரியை மாணவிகளின் சீருடையிலுள்ள வாட்டியைப் பிரித்து முழங்கால் தெரியாதவகையில் சீருடையை சீர்படுத்தியுள்ளார்.

ஆத்திரமடைந்த மாணவியொருவர் இதுதொடர்பில் தனது தாயிடம் முறையிடவே, தாயும் தனது கணவரான வடமாகாண சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினரான ஆனந்த சரத்குமாரவின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

தனது அரசியல் பலத்தை நிரூபிக்கும் வகையில் பாடசாலைக்கு சென்ற ஆளும்கட்சியின் அரசியல்வாதி, ஆசிரியரை அச்சுறுத்தியதுடன் பாடசாலையின் வாயிலை இழுத்து மூடி தன்னிடம் முழந்தாளிட்டு மன்னிப்புக் கேட்குமாறு பணித்துள்ளார்.

பாடசாலை நிறைவடைந்து தனது கணவரின் வருகைக்காக ஆசிரியை காத்திருந்தபோதே அரசியல்வாதி இவ்வாறான அட்டகாசத்தை புரிந்துள்ளதுடன் முழந்தாளிடவிட்டால் வீட்டுக்குவந்து மகளிடம் மன்னிப்புக் கோருமாறும் அச்சுறுத்தியுள்ளார்.

பலத்திற்கும், அச்சுறுதலுக்கும், உயிருக்கும் அஞ்சிய ஆசிரியை அவ்விடத்திலேயே சுமார் 200 மாணவர்களுக்கு முன்னிலையில் முழந்தாளிட்டு அரசியல்வாதியின் உத்தரவிற்கு அடிபணிந்துவிட்டார். எனினும், அரசியல்வாதியோ தற்போது கம்பி எண்ணிக்கொண்டிருக்கின்றார்.

வடமேல் மாகாண சபையை சேர்ந்தோர் இவ்வாறு நடந்துகொண்டமை இது முதன்முறையல்ல. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் தோல்வியடைந்த ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களை, இந்த மாகாண சபையைசேர்ந்த ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களை நிர்வாணப்படுத்திய வரலாறும் இச்சபைக்கு இருக்கின்றது.

தனது மகளின் ஒழுக்கத்தில் கவனம்செலுத்திய ஆசிரியை பாராட்டி மகளுக்கு பாடம்புகட்டவேண்டிய பெற்றோர் தங்களுக்குரிய பலத்தை நிரூபிக்கும் வகையில் நடந்துகொண்டமை ஆசிரியர் சமூகத்தை அவமானப்படுத்தும் செயலாகும்.

கலாசார சீர்கேடுகளினால் பாலியல் தொந்தரவுகள் அதிகரித்துள்ள நிலையில் ஆசிரியையின் அறிவுரையை அந்த மாணவி மதித்திருக்கவேண்டும். இன்றேல் அந்த மாணவியின் தாய், தந்தை மாணவிக்கு எடுத்தியம்பியிருக்க வேண்டும்.

ஆனால், மாணவியின் முழங்காலை மறைத்தமையினால் ஆசிரியர் முழந்தாளிடப்பட்டமையும் அரசியல்வாதி கம்பி எண்ணிக்கொண்டிருப்பதும் 'பதவி பறிபோனதும் மாணவி தொடர்ந்து அந்த பாடசாலையில் கல்விபயில முடியாததுமே மிச்சமாக இருக்கின்றது.

முழந்தாளிடவைத்த சம்பவத்தின் சூடு தணிவதற்குள் அநுராதபுரம் நிவந்தக செட்டிய கல்லூரியின் அதிபரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினரான அனில் புஷ்பனாந்தவின் மகன் தாக்கியுள்ளார்.

விடுமுறையின்போது மேலதிக வகுப்புகளுக்கு வருமாறு மாணவர்களிடம் அதிபர் கூறியபோதே அந்த மாணவன் அதிபரை தாக்கியுள்ளார்.

ஒரு சில பெற்றோரும் சில மாணவர்களும் ஏன்? ஆசிரியர்கள் சிலரும் நடந்துகொள்ளும் இவ்வாறான பொருத்தமற்ற செயற்பாடுகளினால் ஏனைய மாணவர்களின் உளநிலை பாதிக்கப்படுகின்றமை கவலையுடனும் கண்டிப்புடனும் நோக்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

இவற்றுக்கெல்லாம் பதிலளிக்கவேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கும் இருக்கின்றது.

அரச ஊழியர் ஒருவரை களனியில் மரத்தில் கட்டிவைத்து தண்டித்த அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு எதிராகவும், மேஜர் ஜெனரல் ஒருவரை தாக்கிய அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகனை தண்டிக்காமை உள்ளிட்ட சம்பவங்களே அரச ஊழியர்களுக்கு எதிரான அரசியல்வாதிகளின் அடாவடித்தனத்திற்கு காரணமாக அமைந்துள்ளன என்றால் அதில் தவறிருக்காது.

நாடோடி

# சீனாவின் முத்துமாலையை முறியடிக்க

## இந்தியாவின் பூமாலை திட்டப்படுகிறதா?

பூமாலை!! இந்து மகா சமுத்திரத்தில் இடம்பெற்றுவரும் சீனாவின் முத்துமாலை சுற்றிவளைப்பை முறியடிக்க இன்னொரு பூமாலை ஒப்பரேஷனுக்கு இந்தியா திட்டமிட்டு வருகிறதா? அவ்வாறெனில் முன்பு பூமாலை ஒப்பரேஷன் நடத்துவதற்கு இந்தியா திட்டமிட்டிருந்ததா? என்று கேட்கக்கூடும். ஆம் திட்டமிட்டிருந்தது. எப்போது? 26 ஆண்டுகளுக்கு முன்பு - 1987 இல் ஜெயவர்த்தனா நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்தார். அவரின் ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் லலித் அத்துலத்முதலி.

இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே உக்கிரமாக சண்டை இடம்பெற்று வந்தகாலம். யுத்தத்தை நிறுத்தும்படி ஜெயவர்த்தனாவுக்கு இந்தியா அழுத்தம் கொடுத்து வந்தது. அழுத்தத்திற்கு ஆரம்பத்தில் ஜெயவர்த்தனா அரசாங்கம் பணியவில்லை. இந்தியா வடபகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை வான் பிராந்தியத்திற்குள் ஊடுருவி உணவுப் பொதிகளைப் போட்டது.

பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் வழிநடத்தலில் இலங்கை இராணுவம் வடமராட்சியில் ஒப்பரேஷன் லிபரேஷன் என்ற இராணுவ நடவடிக்கையை பெரிய அளவில் மேற்கொண்டு வந்தது. அழுத்தத்திற்கு இணங்காத பட்சத்தில் இரகசிய திட்டம் ஒன்றை இந்தியா தயாரித்து வைத்திருந்தது. இலங்கைக்குள் இராணுவ ரீதியாக காலை ஊன்றுவதுதான் இரகசியத் திட்டமாகும். அத்திட்டத்திற்கு இந்தியா வைத்த பெயர்தான் பூமாலை. ஆங்கிலத்தில் (Operation Garland) ஒப்பரேஷன் பூமாலை என்பதாகும்.

எனினும், இந்தியா கொடுத்த அழுத்தத்திற்கு ஜெயவர்த்தனா அரசாங்கம் பணியவேண்டியதாயிற்று. ஒப்பரேஷன் லிபரேஷன் இராணுவ நடவடிக்கையை ஜெயவர்த்தனா அரசாங்கம் இடைநடுவில் கைவிட்டது. அதனை அடுத்து உருவானது தான் இந்திய-இலங்கை உடன்படிக்கை. அப்போது பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி இலங்கை வந்தார்.


ஜெயவர்த்தனாவுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். ராஜீவ்-ஜெயவர்த்தனா உடன்படிக்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டதுதான் மாகாணசபை முறைமையாகும்.

இன்று 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லாமற் செய்வதற்கு 37 சிங்கள பேரினவாத அமைப்புகள் ஒன்று சேர்ந்துள்ளன. இவ்வமைப்புகளில் இரண்டு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் பங்காளிக் கட்சிகளாக இருக்கும் தேசிய சுதந்திர முன்னணியும் ஜாதிக ஹெல உறுமயவும் ஆகும்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் வீரவன்ஸ, ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் சம்பிக்க ரணவக்க அமைச்சராக இருக்கிறார். வெளியிலிருந்தும் பேரினவாத அமைப்புகள் ஆதரவளிக்கின்றன.

அவற்றில் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ், பௌத்த பலசேனா, தேசிய பிக்குகள் முன்னணி, சிங்கள ராவய, சிங்கள வீர விதான உட்பட 37 அமைப்புக்கள் ஒன்றுசேர்ந்து மாகாணசபை முறைமையை இல்லாமல் செய்யும் தேசியக் கூட்டமைப்பு ஒன்றை ஆரம்பித்துள்ளன.

இவ்வமைப்பின் அங்குரார்ப்பணக் கூட்டம் கொழும்பு, விஜேராம மாவத்தையில் உள்ள ஹெக்டர் கொப்பேக்கடுவ விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் கடந்தவாரம் இடம்பெற்றது. அங்குரார்ப்பண உரையை ஜாதிக ஹெல உறுமயவின் அமைச்சர் சம்பிக்க ரணவக்க நிகழ்த்தினார். மாகாண சபைகளுக்கு 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் காணி மற்றும் காவல் அதிகாரங்களை வழங்குவதால் நாட்டிற்கு ஏற்படப்போகும் ஆபத்துக்கள் பற்றி அவர் அங்குரார்ப்பண உரையில் விவரித்தார்.



வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைப்பதற்கு அனுமதித்தால் அது நாட்டைப் பிரிப்பதில் போய் முடியும் என்று பேரினவாத சட்டத்தரணிகள் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் முழங்கினர். நிறைவாக கூட்டத்தின் முடிவில் தீர்மானிக்கப்பட்டது விரைவில் கொழும்பில் 13 க்கு எதிராக பிரமாண்டமான மாநாடு ஒன்றை நடத்துவது; நாட்டில் உள்ள சிங்கள பௌத்த அமைப்புகளைச் சேர்ந்த 25 ஆயிரம் பிரதிநிதிகளை அதில் பங்குபற்ற வைப்பது. 3000 பௌத்த மதகுருமார்களையும் பங்குபற்ற வைப்பது என்றெல்லாம் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. 13 க்கு எதிராக சிங்களப் பேரினவாதமே திரண்டெழுவதற்கு தயாராகி வருகின்ற இக்காலகட்டத்தில் இலங்கை பற்றிய கவனிப்பை சர்வதேச சமூகம் தீவிரமாக்கியுள்ளது.

இப்பின்னணியில் புதுடில்லி அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அவசரமாக அழைத்து பேச்சுவார்த்தைகளை நடத்திவருகின்றது. தமிழ்த்தேசிய கூட்டமைப்புத் தலைவர்கள் தற்சமயம் புதுடில்லியில் தங்கியிருந்து முக்கியமான பேச்சுவார்த்தைகளை இந்தியத் தலைவர்களுடன் நடத்தி வருகின்றனர். ராஜீவ்காந்தி உருவாக்கிய 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழான அரசியல்தீர்வை நீர்த்துப்போகவிடக்கூடாது என்ற உறுதிப்பாட்டுடன் இந்திய தரப்பு இயங்கிவருவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல்தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்ற கருத்து சர்வதேச சமூகத்தில் தீவிரமாகிவரும் காலம் இதுவாகும். இப்பிரச்சினையில் இனியும் மௌனமாக இருக்கமுடியாத நிலைக்கு இந்தியா உள்ளாகியிருக்கிறது. இந்தியாவை சுற்றிவளைக்கும் சீனாவின் முத்துமாலை ராஜதந்திரோபாய நடவடிக்கைகளை முறியடிக்கும் கட்டத்திற்கு இந்தியா நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

முத்துமாலை ராஜதந்திரத்தை முறியடிக்க மீண்டும் ஒரு பூமாலை நடவடிக்கையை மேற்கொள்வதாக இந்தியாவின் தந்திரம் அமையக்கூடும் என்பதே அவதானிகளின் எதிர்பார்ப்பாகும். கச்சதீவு பிரச்சினையை முன்வைத்தே இந்தியாவின் பூமாலை நடவடிக்கை அமையக்கூடும். கச்சதீவு மீண்டும் இந்தியாவின் கைகளுக்குப் போனால் என்ற கேள்விக்கு இடமில்லை என்று இலங்கை கூறினாலும், இந்திய-இலங்கை உடன்படிக்கையின் கீழ் மாகாணசபை முறைமையின் கீழ் இலங்கை இனப்பிரச்சினைக்கு நிலைத்து நிற்கக்கூடிய நிரந்தரமான அரசியல் தீர்வை கொண்டு வந்தேயாக வேண்டும் என்ற அழுத்தத்திலிருந்து கொழும்பு அரசாங்கம் தப்பிவிட முடியாது என்பது சர்வதேச அவதானிகளின் கருத்தாக உள்ளது.

அநாமிகன்

# உலகம் பேசுகிறது



## பிரமாண்ட இடுப்பழகி

அமெரிக்காவைச் சேர்ந்த இந்த பிரமாண்ட பெண்மணியின் பெயர் மைக்கேல் ரூபினெலி வயது 39. இவர் உலகில் மிகவும் ஸ்பெஷலான பெண்மணியும் கூட. உலகிலேயே மிக பிரமாண்டமான பெரிய இடுப்பையுடைய பெண் இவர் தான். இவரது இடுப்பின் சுற்றளவு எவ்வளவு தெரியுமா? எட்டு அடி.

மெல்லிடையாள், கொடியிடையாள் ஆகியோரை மட்டும் தான் சாதனைப் பெண்களாகக் கருதுவீர்களா? என் போன்ற பிரமாண்ட இடையாளையும் சாதனையில் இணைத்துக் கொள்ளுங்கள் என சண்டைக்கு வரிந்து கட்டிக் கொண்டிருக்கிறார் ரூபினெலி. இவருக்கு மூன்று குழந்தைகள் உள்ளன. எப்படி இந்த மெகா இடுப்புடன் வலம் வருகிறீர்கள். கஷ்டமாக இல்லையா? என கேட்டால் கஷ்டமா... என் இடுப்பின் அழகை ஒவ்வொரு நிமிடமும் அனுபவித்து ரசித்துக் கொண்டிருக்கிறேன் என்கிறார்.

## பாம்புடன் படுத்துறங்கும் சிறுவன்

'பாம்பு என்றால், படையும் நடுங்கும்' என்ற பழமொழியை, பொய்யாக்கி இருக்கிறான், சீனாவைச் சேர்ந்த இந்த சிறுவன். சீனாவின், டொங்கூன் என்ற பகுதியைச் சேர்ந்த, அஜெலியு என்ற, 13 வயதுச் சிறுவன், 15 அடி நீளமுள்ள, மலைப் பாம்புடன், கொஞ்சி விளையாடியும், படுத்து உறங்கியும், மலைக்க வைக்கிறான். இவன் பிறப்பதற்கு முன், இவனது தந்தை, வனப் பகுதிக்கு சென்றபோது, மலைப் பாம்பு முட்டை ஒன்றை எடுத்து வந்துள்ளார். அந்த முட்டையிலிருந்து பிறந்தது தான், இந்த மலைப் பாம்பு. சிறுவன் பிறந்ததும், பாம்பும் அவனும், நெருங்கிய நண்பர்களாகிவிட்டனர்.

சின்ன வயதிலிருந்தே, பாம்புடன் விளையாடி வருவதால், இப்போது, அந்த பாம்பு, பல அடி நீளத்துக்கு வளர்ந்தாலும், அதை பார்த்து, அவன் பயப்படுவது இல்லை. பாம்பும், அவனை ஒன்றும் செய்வது இல்லை.

சிறுவனின் பெற்றோர், அவனை தனியாக, வீட்டில் விட்டுச் சென்றாலும், பாம்பு தான், அவனுக்கு காவல் இருக்கிறது. இந்த அதிசய சிறுவனின், துணிச்சலைப் பார்த்து, ஆச்சரியப்படுகின்றனர், சீன மக்கள்.



## உடல் எடையைக் குறைக்க பிளாஸ்ரிக் நாக்கு



உடல் எடையை குறைக்க பலர் உடற்பயிற்சி உணவுக் கட்டுப்பாடு என பல்வேறு வழிமுறைகளை கடைப்பிடிக்கிறார்கள். அப்படியும் எதிர்பார்ப்புக்கு ஏற்ப எடை குறையவில்லையே என மனக்குறை சிலருக்கு ஏற்படுகிறது. இந்த குறையை போக்க அமெரிக்காவை சேர்ந்த பிளாஸ்ரிக் அறுவைசிகிச்சை நிபுணர் ஒரு புதுமையான வழிமுறையை கண்டுபிடித்திருக்கிறார்.

அதாவது நாக்கில் ஒரு பிளாஸ்ரிக் துண்டை ஒட்டி வைத்துக் கொள்ள வேண்டும். அது கடினமாக அதிக கலோரி உணவுப் பொருட்களை சுவைக்கும்போது வலியை ஏற்படுத்தும். எனவே அதை தவிர்த்து விடுவோம். அதேநேரத்தில் திரவ பொருட்களைப் பருகினால் ஒன்றும் செய்யாது. இதன் மூலம் ஒரே மாதத்தில் 14 கிலோ எடையை குறைக்க முடியும் என்று நிபுணர் தெரிவிக்கிறார். இதற்கு 2 ஆயிரம் டொலர்கள் செலவாகும்.

## ஓட்டைப்பல் ஸ்டைல்

தென் ஆபிரிக்காவில் உள்ள இளைஞர்களிடையே தங்களின் முன்புற பற்களை அகற்றும் வினோதமான நடைமுறை புது பேஷனாக உருவெடுத்துள்ளது. முன்புறத்தின் மேற்புறத்தில் உள்ள இரண்டு அல்லது மூன்று பற்களை பல் மருத்துவரிடம் சென்று அகற்றிவிட்டு ஓட்டைப் பல் வாயர்களைப் போல் காட்சி அளிக்கின்றனர்.

இப்படி வித்தியாசமான தோற்றத்தில் காட்சி அளிப்பதால் இளம் பெண்கள் எங்களை பார்க்கின்றனர். எங்களுடன் பேச ஆசைப்படுகின்றனர். அதனால் தான் ஓட்டைப் பற்களுக்கு மாறி வருகிறோம் என்கின்றனர் இளைஞர்கள்.

இங்குள்ள பெரியவர்களோ ''இது ஏற்கனவே பின்பற்றப்படும் பழக்கம் தான். இங்குள்ள மீனவர்கள் மீன் பிடிக்க செல்லும்போது கடல் அலைகளின் ஓசையால் ஒருவர் பேசுவது மற்றொருவருக்கு சரியாக கேட்காது. இதனால் விசில் மூலம், சைகை செய்வதற்கு வசதியாக பற்களை அகற்றினர். இந்த நடைமுறை தான் இப்போது பேஷனாக உருவெடுத்துள்ளது'' என பின்னணியை விளக்குகின்றனர்.



## மனித முகத்துடன் நாய்! அமெரிக்காவில் அதிசயம்



அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்தில் உள்ள மிஸ்வாகா நகரில் ஒரு வினோதமான உருவமுள்ள நாய், விலங்குகள் நல காப்பக அதிகாரிகளால் மீட்கப்பட்டது. இந்த நாய்க்கு 2 வயது தான் ஆகிறது. இதன் முகம் அச்சு அசலாக மனிதர்களின் முகம் போல் காட்சி அளிக்கிறது. டிஜு-பிடுல் ஆகிய இரு வெவ்வேறு ரக நாய்களின் கலப்பில் பிறந்த இந்த நாய்க்கு ''டோனிக்'' என பெயர் சூட்டியுள்ளனர்.

டோனிக்கை விரைவில் தத்துக் கொடுக்கவும் அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். இதன் புகைப்படம் இணையத்தளத்தில் வெளியானதையடுத்து அமெரிக்கா முழுவதுமிருந்து அந்த நாயை தத்தெடுக்க விண்ணப்பங்கள் வந்து கொண்டே இருக்கின்றன.

விலங்குகள் காப்பக அதிகாரிகள் கூறுகையில் வித்தியாசமான தோற்றத்தில் இருப்பதால் இதைப் பார்த்து பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. ரொம்ப மனிதர்களுடன் நன்றாகப் பழகுகிறது. சாதுவாக இருக்கிறது. மிகவும் அரிதாகத் தான் இதுபோன்ற நாய்கள் கிடைக்கும் என்கின்றனர்.

# என்னாச்சி...!



## இது தேவையா?

நானும் என் தோழியும் ஷொப்பிங் சென்றிருந்தோம். அப்போது ஒரு கடையில் சேப்டி பின் வாங்க அவள் சென்றாள். அப்போது அந்தக் கடைக்காரர் சொன்னார் ''இங்கே வெள்ளையாக வருவதற்காகவும், சருமம் மிருதுவாகவும் இளமையாகவும் தோற்றமளிக்கவும் பல கிறீம்கள் இருக்கின்றன வாங்கிப் பயன்படுத்திப் பாருங்கள் நீங்களே ஆச்சரியப்படுவீர்கள் என்று சொல்லி அங்கே வேலைசெய்யும் ஒரு பெண்ணை அழைத்து அவளிடம் ஒரு பச்சைக் கலர் போத்தலைக் கொடுத்தார். அவள் அந்த போத்தலை திறந்து அதில் இருந்து கொஞ்சம் கிறீமை என் தோழியின் கையில் தடவி ஒரு இரண்டு நிமிடத்தில் பஞ்சினால் அதனை துடைத்தெடுத்தாள். அதன் பின் அவளுடைய கை கொஞ்சம் பளபளப்பாகத்தான் இருந்தது. அந்த கிறீமின் விலையை விசாரித்தபோது 400/= ரூபா என்றார். அவளும் விலையும் குறைவாகத் தானே இருக்கு என்று நினைத்து அக்கிறீமை வாங்கினாள். அப்போது நான், விலை குறைவான பொருளில் தரம் இருக்காது. மேலும் இதுபோன்றவை நம் தோல்களுக்கு உகந்தவை இல்லை, வேண்டாம் என்று மறுத்தேன். அவள் பிடிவாதமாக வாங்கினாள்.

இரண்டு நாள் கழித்து அந்தத் தோழி என் வீட்டுக்கு வந்தாள். அவள் வாட்டத்தோடு இருப்பதற்கான காரணத்தை விசாரித்தேன். ''அன்று கடையில் வாங்கிய பேஸ்கிறீம், ஸ்கின் லோஷன் என்பனவற்றை என் மூத்த மகளுக்குக் கொடுத்தேன். அதை அவள் தடவிக்கொண்டாள். சிறிது நேரத்தில் அரிக்க ஆரம்பித்துவிட்டது. சொறிந்து சொறிந்து உடம்பும் முகமும் சிவந்து தடிப்பு தடிப்பா ஆயிடுச்சி. நான் அவளை அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு சென்றேன். டாக்டர் மருந்து எழுதிக் கொடுத்தார். இப்போது கொஞ்சம் பரவாயில்லை'' என்றாள் அவள்.


நான் அவளிடம் ''நான் அப்போதே சொன்னேன். நீ கேட்கவில்லை. இனிமேலாவது வெள்ளையா வர்ற கிறீம் என்று சொல்லி விற்றால் வாங்கிவிடாதே நல்ல பழங்கள் மற்றும் இயற்கையான உணவு உண்பதோடு போதுமான தண்ணீர் அருந்தினாலே போதும். அப்படியே கிறீம் வேண்டும் என்றால் நல்ல தரமானதா என்று பார்த்து வாங்கிப்பயன்படுத்து'' என்றேன். அன்றிலிருந்து என் தோழி தரமற்றப் பொருட்களை வாங்குவதில்லை என்று முடிவு செய்துவிட்டாள் சரிதானே?

## என்ன ஒரு வளர்ச்சி

சமீபத்தில் எங்கள் வீட்டுக்கு பக்கத்தில் உள்ள வயோதிபர் இல்லத்தில் உள்ள ஒரு ஆச்சி இறந்துவிட்டாள். இறந்தபின் ஆச்சியின் இளைய மகன் பிணத்தை தன் வீட்டில் வைத்துதான் இறுதிக்கிரியை செய்வேன் என்று அடம்பிடித்து வீட்டுக்கு எடுத்துச் சென்றான்.

நானும் முதியோர் இல்லத்தில் உள்ள அக்காவும் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக அவரின் வீட்டுக்கு சென்றிருந்தோம்.

இறந்துபோன ஆச்சிக்கு ஐந்து பிள்ளைகள். அதில் கடைசி மகன் மட்டும்தான் உள்ளூரில் உள்ளார். மற்ற அனைவரும் லண்டனில் இருந்தனர். மேலும் மற்ற பிள்ளைகளால் ஆச்சியின் இறுதிக் கிரியைக்கு வரமுடியவில்லை. அதனால் வீட்டிலிருந்த கம்ப்யூட்டரில் 'வெப் கேமரா' மூலமாக இறுதிச் சடங்குகள் அவர்களுக்கு காட்டப்பட்டன.



திரையில் ஆச்சியின் பிள்ளைகள் தோன்றியதும், வந்திருந்த உறவினர்கள் ஒவ்வொருவராக வெப் கேமரா முன்னால் நிற்கத் தொடங்கிவிட்டனர். நல்லா இருக்கீங்களா என்று தொடங்கி குசலம் விசாரிப்பு அரட்டை என மாறிவிட்டது. அங்கே துயரம் நடந்த சூழ்நிலையே இல்லை. விஞ்ஞான வளர்ச்சி உலகத்தைச் சுருக்கி விட்டாதா? அல்லது உறவு முறைகளையும் மனித நேயத்தையும் சுருக்கிவிட்டதா? என்று தெரியவில்லை.



## அதிரவைத்த சீப்பு

எனது சகோதரிக்கு வரன் பார்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். மாப்பிள்ளை வீட்டாருக்கு அவளுடைய புகைப்படம் அனுப்ப வேண்டி இருந்தது. அவளுக்கு மேக்கப் செய்து போட்டோ எடுத்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தோம். அவளை பியூட்டி பார்லர் அழைத்துச் சென்றோம். மேக்கப் முடிந்தது. அப்போது, என் சகோதரியின் கூந்தலை சீவுவதற்காக அழகு நிலையகத்தில் இருந்த பெண்மணி அங்கிருந்த சீப்புகளில் ஒன்றை எடுத்தாள். எங்களுக்கு அதிர்ச்சியாகிவிட்டது. காரணம் அதில் அவ்வளது அழுக்கு! பலர் வந்து செல்லும் அழகு நிலையத்தில் உபகரணங்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டாமா? பொடுகு உள்ளவர்கள் சீவும் சீப்பை மற்றவர்கள் உபயோகிக்கக்கூடாது. வீட்டிலேயே ஒவ்வொருவரும் தனித்தனி சீப்பு, துண்டு, சோப் உபயோகிக்க வேண்டும் என்று வைத்தியர்கள் அறிவுறுத்துகிறார்கள். பொது இடமான பியூட்டி பார்லரில் சீப்பு இவ்வளவு அசுத்தமாக இருந்தால் எப்படி? இதுபோன்ற பியூட்டி பார்லர் செல்பவர்கள் குறைந்தபட்சம் சீப்பையாவது கையோடு எடுத்துச் செல்வது நல்லது.

தகவல் தொகுப்பு ஆர்.அபி

தினக்குரல்
Voice of Students
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்

# வித்யாதரம்

கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை

**முக்கிய குறிப்பு**


இவ்வினாப்பத்திரம் உட்பட இனி வெளிவரவுள்ள வினாப்பத்திரம் அனைத்தும் தங்களின் சுய பயிற்சிக்காக வெளிவரவுள்ளது. ஆகையால் இவ்வினாப்பத்திரத்திற்கான விடைகளை எமக்கு எழுதி அனுப்பி வைத்தல் அவசியமில்லை. இவ்வினாப்பத்திரத்திற்கான விடைகள் அடுத்த வார கல்விக்குரலில் வெளியிடப்படும்.

ஆசிரியர்
கல்விக்குரல்


## பகுதி I
எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

★ 01 தொடக்கம் 36 வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

★ 01ஆம், 02ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள படங்கள் சரியான ஒழுங்கினால் வர வேண்டிய விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

01. 




1) DACB
2) BCAD
3) DCAB

02. 



1) DBCA
2) BDAC
3) CDBA

★ அருகே உள்ள பெட்டியில் உருவங்கள் வரையப்பட்டுள்ள உருக்கள் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. நீங்கள் காணும் பக்கத்தினது எதிர்ப் பக்கத்தில் வரையப்பட்டுள்ளதும் அதே உரு ஆகும். பெட்டியைப் பிரித்து விரித்து வைக்கும்போது அதைத் திருத்தமாகக் காட்டும் முறையைத் தெரிவு செய்க.

03. 


1)  2)  3) 

★ 04ஆம், 05ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவங்களில் வேறுபட்ட உருவினைத் தெரிவு செய்க.

04. 1)  2) 

3)  4) 

05. 1)  2) 

3)  4) 

★ 06ஆம், 07ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட எண்கோலத் தொடர்புகளை கவனத்திற் கொண்டு விடுபட்ட இடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

06.

| | | |
|---|---|---|
| 4 | 1 | 2 |
| 3 | 5 | 7 |
| 8 | 9 | 6 |

| | | |
|---|---|---|
| 1 | 3 | 4 |
| 2 | 4 | 6 |
| 4 | 5 | 7 |

| | | |
|---|---|---|
| 7 | 9 | 8 |
| 10 | 6 | ? |
| 4 | 3 | 5 |

1) 2
2) 4
3) 6


07.

| | | |
|---|---|---|
| 18 | 19 | 20 |
| 14 | 36 | 22 |
| 16 | 17 | 18 |

| | | |
|---|---|---|
| 19 | 20 | 21 |
| 3 | 25 | 22 |
| 4 | 5 | 6 |

| | | |
|---|---|---|
| 12 | ? | 11 |
| 14 | 18 | 4 |
| 7 | 11 | 6 |

1) 7
2) 9
3) 11

08. 

அருகில் தரப்பட்டுள்ள உருவில் எத்தனை சதுரங்களை இனங்காணலாம்?

1] 9
2] 12
3] 14

09. கோபிகா பாடசாலையின் வலைப்பந்தாட்டக் குழுவின் தலைவியாக நியமிக்கப்பட்டாள். இதற்குக் காரணமாக அமையக்கூடியது,

1] கோபிகாவின் தகப்பன் பாடசாலையில் விளையாட்டு ஆசிரியராக இருந்தமை.

2] கோபிகா பாடசாலையில் உயரமான மாணவியாக இருந்தமை.

3] கோபிகா வலைப்பந்தாட்டத்தில் கூடிய திறமை காண்பித்தமை.

10. இரண்டு மோட்டார் வண்டிகள் ஓர் இடத்திலிருந்து புறப்பட்டுப் பின்னர் அவை ஒவ்வொன்றும் எதிர்த் திசைகளில் 100 மீற்றர் தூரம் செல்கின்றன. பின்னர் ஒரு வண்டி வலப்பக்கமும் மற்றைய வண்டி இடப்பக்கமும் திரும்பி ஒவ்வொன்றும் 200 மீற்றர் தூரம் செல்கின்றன. இப்போது இரண்டு வண்டிகளுக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு?

1] 600 மீற்றர்
2] 300 மீற்றர்
3] 200 மீற்றர்

11. ஒரு வட்டவடிவான மைதானத்தைச் சுற்றி சமமான இடைவெளிகளில் வேலிக் கம்பங்கள் சுற்றி நடப்பட்டுள்ளன. இரு கம்பங்களுக்கும் இடைப்பட்ட தூரம் 10 மீற்றர் ஆகும் எனின், 10 கம்பங்களுக்கும் இடைப்பட்ட தூரம் யாது?

1] 90m
2] 100m
3] 190m

12. தென்னந்தோட்டம் ஒன்றில் ஒரு நிரையில் 9 தென்னைகள் சம அளவு தூரத்தில் நடப்பட்டுள்ளன. அவற்றிற்கிடையிலான மொத்தத் தூரம் 163m ஆகும். இரண்டு தென்னை மரங்களுக்கிடைப்பட்ட தூரம் எவ்வளவு?

1] 20 m
2] 30 m
3] 40 m
4] 10 m

★ **முதலாவதாகத் தரப்பட்டுள்ள நிகழ்வுடன் தொடர்புடைய சரியான கூற்றைத் தெரிவு செய்க.**


13. பாடசாலை நற்பிரஜைகளை உருவாக்கும் இடமாகும்.




1] இது எப்பொழுதும் சரியானதொன்றாகும்.


2] இது சில வேளைகளில் சரியானதாகும்.

3] இது பொதுவாக சரியானதாகும்.

★ **14ஆம், 15ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்ட உருவானது எந்தப் பொருளினை மேலிருந்து பார்க்கும்போது தெரியும் தோற்றமாகும்? என்பதைத் தெரிவு செய்க.**

14. 

1]  2]  3] 

15. 

1]  2]  3] 

★ **16ஆம், 17ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்ட சொற்கள் குறிப்பிட்ட சம்பவம் ஒன்றினைக் குறிக்கின்றன. அச் சொற்களால் குறிக்கப்படும் மிகவும் பொருத்தமான சம்பவத்தினைத் தெரிவு செய்க.**

16. காற்று, பட்டம், மரம், நூல்

1] மரத்தில் இருந்த நூல் காற்றினால் பட்டத்தில் விழுந்தது.

2] பட்டத்தின் நூல் காற்றினால் மரத்தின் மேலே சென்றது.

3] காற்றினால் பட்டத்தின் நூல் அறுந்து பட்டம் மரத்தில் சிக்கியது.

17. ஆசிரியர், வகுப்பறை, மாணவர்கள், வணக்கம்

1] வகுப்பறைக்கு வந்த மாணவர்களும், ஆசிரியரும் எல்லோருக்கும் வணக்கம் தெரிவித்தனர்.

2] வகுப்பறை மாணவர்கள் வணக்கம் கூறும் ஆசிரியராவர்.

3] ஆசிரியர் வகுப்பறைக்கு வந்ததும் மாணவர்கள் வணக்கம் தெரிவித்தனர்.

# வினாத்தாள் - 02

# 1 மணித்தியாலம் 15 நிமிடம்

**முக்கிய குறிப்பு**

இவ்வினாப்பத்திரம் உட்பட இனி வெளிவரவுள்ள வினாப்பத்திரம் அனைத்தும் தங்களின் சுய பயிற்சிக்காக வெளிவரவுள்ளது. ஆகையால் இவ்வினாப்பத்திரத்திற்கான விடைகளை எமக்கு எழுதி அனுப்பி வைத்தல் அவசியமில்லை. இவ்வினாப்பத்திரத்திற்கான விடைகள் அடுத்த வார கல்விக்குரலில் வெளியிடப்படும்.

ஆசிரியர்

**01. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

பூமாதேவியைக் கௌவி மூடிக் கொண்டிருந்த காரிருள் மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருக்கிறது. உச்சி வானத்தில் வைரங்களை வாரி இறைத்தது போல பிரகாசித்துக் கொண்டிருந்த விண்மீன்களின் ஒளி குறையத் தொடங்குகின்றது. கதிரவன் தன் பொன்மயமான கதிர்களைப் பார்மீது மெல்ல மெல்ல பரவ விடுகிறான். கிழக்கு வானிலே முகிற்கூட்டங்களுக்கு மத்தியில் தங்கத் தட்டைப் போல சூரியன் மினுமினுங்கத் தொடங்குகின்றான். “ சூரிய பகவானே வருக ” என சகல உயிர்களும் அவனை வரவேற்கின்றன. பறவைகளின் குதூகலமான இனிய நாதங்கள் காற்றில் பரவுகின்றன.

01. மேலே தரப்பட்ட பந்தியில் இயற்கை காட்டும் இன்பக் காட்சி எது?

___________________

02. இக் காட்சி எழுதப்பட்டுள்ள காலம்?

___________________

03. பந்தியிலுள்ள அடுக்குமொழிச்சொல் ஒன்று எழுதுக.

___________________

04. “ **ஒளி** ” என்பதன் எதிர்க்கருத்து யாது?

___________________

05. “ **முகில்** ” என்பதன் ஒத்தகருத்து யாது?

___________________

06. சூரியன் எதற்கு உவமித்துக் கூறப்படுகிறது?

___________________

07. “ **விரிகின்றன** ” என்பதன் இறந்தகால வடிவம் யாது?

___________________

**02. ஒழுங்குபடுத்தி எழுதுக.**

உழுத / தானியங்களை / பின் / விதைத்தான் / வயலை / உழவன்

___________________

___________________

**03. சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1) ஆத்துங்கரை, ஆற்றங்கரை, ஆற்றம்கரை, ஆற்றங்கறை

2) கலைவிலா, களைவிழா, கலைவிழா, கழைவிலா

**04. மலை, மழை, மாலை போன்றவற்றை பொருத்தமான இடத்தில் எழுதுக.**

________ நேரத்தில் ________ நாட்டில் ________ பெய்தது.

**05. பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இடுக.**

அடேயப்பா எவ்வளவு பெரிய நீர்வீழ்ச்சி

06. “ **பூசி மெழுகுதல்** ” என்பதன் கருத்து யாது?

___________________

07. விசாரணை முடிவில் நீதிபதியினால் வழங்குவது என்பதைக் குறிக்கும் தனிச்சொல் .

___________________

08. “ **இளமையிற் கல்வி சிலையில் எழுத்து** ” என்னும் பழமொழியின் கருத்தை எழுதுக.

___________________

09. மயிலின் ஆண் மரபை எழுதுக.

___________________

**10. வெற்றிடத்திற்குப் பொருத்தமான மிகச் சரியான சொல்லை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

01. அந்தப் ________________ மாணவர்கள் எல்லோரும் மிகச் சரியாகச் செய்து முடித்தனர்.

( பயிர்ச்சியை, பயிற்சியை, பயிச்சியை, பயிட்ச்சியை )

02. அவர் அதிக ______________________ ஒரு நப ராவார்.

( சுயனலமுள்ள, சுயநளமுள்ள, சுயநலமுள்ள, சயன்நலமுள்ள )

**11. பின்வரும் தமிழ்ச்சொற்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

1) தேங்காய் - ______________________

2) கடை - ______________________

3) என்னைப் பார் - ______________________

4) எட்டு - ______________________

**12. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்க்கருத்தை எழுதுக.**

1) I will bring flowers - ______________________

2) Come forward - ______________________

3) Well - ______________________

13. ''நம மொகக்த?'' **என்பதன் தமிழ்க்கருத்தைத் தருக.**


______________________

14. 'புத்தகம் வாசியுங்கள்' **என்பதன் சிங்களச் சொல்லைத் தருக**

______________________

**15. பின்வரும் தாவரப் படங்களின் பெயர்களை எழுதுக.**

1) 

2) 

__________ __________

16. பின்வரும் படங்கள் எதனைக் குறிக்கும்?

1) 

2) 

__________ __________

**17. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. தண்ணீரைச் சுத்தம் செய்யப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள் எது?

1) குளோரின் 2) அயடீன்

3) கல்சியம் 4) மண்ணெண்ணெய்

02. தாவர இலைகள் மஞ்சள் நிறமாவதற்குக் காரணமானது,

1) தண்ணீர் குறைபாடாயிருத்தல்

2) காற்றுக் கிடைக்காமை

3) சூரிய ஒளி கிடைக்காமை

4) தாவரப் போசணைக் குறைவு

03. கண்டமாலை நோய் ஏற்படக் காரணம் யாது?

1) பொசுபரசுக் குறைபாடு 2) அயடீன் குறைபாடு

3) சோடியக் குறைபாடு 4) இரும்புக் குறைபாடு

04. வெடித்தல் மூலம் பரவிப் பெருகும் தாவர வித்து எது?

1) காசித்தும்பை 2) மகோகனி

3) எருக்கலை 4) ஏழிலைப்பாலை

05.  அருகில் காட்டப்படும் சைகைகளினால் குறிக்கப்படுவது யாது?

1) முன்னால் வரும் வாகனங்களை நிறுத்துங்கள்

2) பின்னால் வரும் வாகனங்களை நிறுத்துங்கள்.

3) முன்னாலும் பின்னாலும் வரும் வாகனங்களை நிறுத்துங்கள்.

4) வலப்பக்கமாகவும், இடப்பக்கமாகவும் வரும் வாகனங்களை நிறுத்துங்கள்.

06. நீரில் கரையாதது எது?

1) உப்பு 2) யூரியா


3) வினாகிரி 4) மண்ணெண்ணெய்


07. நீரில் மிதப்பது எது?


1) பனிக்கட்டி 2) இரும்பாணி


3) குண்டூசி 4) கல்

08. துளையூடாக நீர் பாயும் சரியான முறை எது?

1) 

2) 

3) 

4) 

09. நீர்மட்டத்தினை சரியாகக் காட்டாதது எது?

1) 

2) 

3) 

4) 



# அழகு...,

உடல் நலம்...,
குழந்தை வளர்ப்பு
சாதனை மகளிர்...,
ஆலோசனை...,
உளவியல்...,

# சிநேகிதியே


## தையல் பயிற்சி


### நைட்டி

தேவையான புடவையின் அளவும் மடிக்கும் முறையும் $2\frac{1}{2}$

36' அகலமான புடவை 3y தேவைப்படும்.

தேவையான அளவு
தோள்பட்டை அளவு = 16
பாவாடையின் உயரம் = $35+1+\frac{1}{2}$ + = $36\frac{1}{2}$





படம் (1) இல் காட்டியவாறு வெட்டிக்கொள்ள வேண்டும்.
படம் (2) இல் பாவாடையின் பகுதியை வெட்டி யோக் பகுதியினூடாக சுருக்கம் பிடித்துக்கொள்ள வேண்டும்.



தையல் கலையின் பரிமாணங்கள் தருபவர் :- திருமதி. ராஜேஸ்வரி குமார் - பண்டாரவளை



# ஆள் பாதி ஆடை பாதி

அன்றைய காலம் தொட்டு இன்றைய காலம் வரை நாம் கேள்விப்படும் வரிகளில் ஒன்று ஆள் பாதி ஆடை பாதி என்பதுதான். இதன் அர்த்தம்தான் என்ன? ஒரு மனிதனை அவர்கள் அணியும் ஆடையை வைத்தே மதிப்பிடலாம் என்பதைக் குறிப்பிடுவது.

இதில் இந்த ஆடை என்பதை இன்று பல பேருக்கு எப்போது? எங்கே? எவ்வாறு? அணிந்து செல்லல் வேண்டும் என்று தெரிவதில்லை.

பெண்களின் அழகை அதிகரித்துக் காட்டுவதே அவர்கள் அணியும் உடைதான் என்கிறார் நம் அழகுக் கலை நிபுணரான தனு ரசாக்.

திட்டமிட்டு ஆடைகளைத் தேர்ந்தெடுத்து உடுத்தினால் பெண்களின உருவ அமைப்பே மாற்றிவிடக்கூடியது இவ் ஆடைகள். ஒவ்வொருவரின் உடல் அமைப்புக்கு ஏற்ற விதத்தில் இன்று வண்ணவண்ணமாக ஆடைகள் காணப்படுகின்றன. எனவே நமக்கான உடை என்ன என்பதை தேர்ந்தெடுத்து உடுத்தவேண்டும். சிலர் சாதாரண இடங்களுக்கே மிகவும் விலையுயர்ந்த ஆடைகளை அணிந்து செல்வர். இவ்வாறு இவர்கள் அணிந்து செல்வதால் பின் ஒரு விருந்து வைபவங்களுக்கும் அவ்வாறு செல்லும்போது எந்தவித வித்தியாசங்களும் அழகும் அவர்களிடத்தில் தெரிவதில்லை.



தனு ரசாக்

சில பெண்கள் வீட்டிலும் தம்மை அதிகமான மேக்கப்களுடன் நவீனமாக ஆடையணிந்து இருப்பார்கள். சிலர் எப்போதும் சாதாரணமாக ஆடையணிந்து பின் என்றாவது ஒருநாள் வெளியில் ஒரு விழாக்களுக்கு செல்லும்போது அழகாக தன்னை அலங்கரித்து தங்களுக்கேற்ற ஆடையணிந்து செல்லும்போது பார்ப்பதற்கு இவர் தானா அந்தப் பெண் என்று பார்ப்பவர்களை வியக்கவைக்கும் அளவிற்கு இருக்கும்.

அலுவலகங்களுக்கோ, பாடசாலைக்கோ செல்லும் பெண்கள் மிகவும் ஆடம்பரமாகவும் கண்களைப் பறிக்கும் விதத்திலும் ஆடை அணிவதைத் தவிர்க்க வேண்டும். கண்ணியமான தோற்றத்தை அளிக்கக்கூடிய சூழ்நிலைக்கு ஏற்ற உடையை அணிந்து செல்வது மிகவும் அவசியம். மிகவும் ஒல்லியாக தோற்றமளிக்கும் பெண்கள் இறுக்கமாக உடை அணியக்கூடாது.

பெண்கள் அணியும், அணியக்கூடிய ஆடைகளின் அது புடைவையாக இருந்தாலும் அந்த அமைப்பே அவர்களின் தோற்றத்தையே மாற்றியமைக்கக்கூடிய தன்மையுடன் திகழ்கின்றது.

இன்று சந்தைகளில் ஒவ்வொருவரின் வசதிக்கேற்ற விதத்தில் பல விலைகளில் ஆடைகள் வந்துவிட்டன. சிலர் தங்களின் உடலின் தன்மை என்னவென்று அறியாமல் மற்றவர்களைப் பார்த்து தாமும் அவ் உடைகளை வாங்கி அணிகின்றனர். ஆனால், சிலருக்கு இவ் உடைகள் பொருத்தமாக அமையாது அவலட்சணமாகிவிடும்.

ஆகவே, பணத்தை விரயம் செய்யாது உங்களுக்கேற்ற கச்சிதமான ஆடைகளை வாங்கி அணியுங்கள்.

**எஸ்.பிரியதர்ஷினி**

# முக அமைப்பிற்கு ஏற்ற பொட்டு

எவ்வளவு அழகாக மேக்-அப் செய்திருந்தாலும், எவ்வளவு விலை உயர்ந்த உடைகள் அணிந்திருந்தாலும், வைரத்திலே ஆபரணங்கள் பூட்டியிருந்தாலும் முகத்திற்கு ஒரு பொட்டு மட்டும் வைக்காமல் இருந்தால், முக அழகு முழுமை பெறாது.

பொட்டை விரும்பும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருப்பதால் எல்லோரையும் கவரும் விதத்தில் பொட்டுக்கள் வண்ணம், வடிவம் போன்றவைகளில் புதுமை படைத்துக் கொண்டிருக்கிறது.

* சதுர முக அமைப்பு உள்ளவர்கள் நீளமாக பொட்டுகளை வைக்கக்கூடாது. அகலம் அதிகமுள்ள பொட்டுகளை வைத்துக்கொள்ளலாம். இவர்கள் வைத்துக்கொள்ளும் பொட்டுக்கள் நீளமானதாகவும், அகலம் குறைந்ததாகவும் இருக்கக்கூடாது. உருண்டை மற்றும் முட்டை வடிவிலான பொட்டுகள் இவர்களுக்கு பொருத்தமாக இருக்கும்.

* உருண்டை முக அமைப்பு உள்ளவர்கள் நீளமான பொட்டுகளை உபயோகிக்கவேண்டும். நீளமான பொட்டு இவர்களது உருண்டை முகத்தை சற்று நீளவாக்காக மாற்றியதுபோல் அழகு தரும். நெற்றி குறுகலாக இருந்தால், அவர்கள் புருவங்களுக்கு மத்தியில் பொட்டு வைக்கவேண்டும்.

* முக்கோண வடிவ முக அமைப்பு உள்ளவர்களுக்கு அநேகமாக எல்லாவகைப் பொட்டுகளும் பொருந்தும். நெற்றி அகலமாக இருந்தால், நீளமான பொட்டுகளை பயன்படுத்த வேண்டும். முக்கோண வடிவிலான பொட்டுகளும் இவர்களுக்கு நன்றாக இருக்கும். அகலமான நெற்றியாக இருந்தால், புருவத்தில் இருந்து ஒரு சென்டிமீற்றருக்கு மேல் பொட்டுவைக்க வேண்டும்.

* இதய வடிவ முக அமைப்பு உள்ளவர்களுக்கு நீண்ட பொட்டுகள் நன்றாக இருக்கும். முகத்தின் வடிவம் மட்டுமின்றி உடை, சரும நிறம் போன்றவைகளும் பொட்டுடன் சம்பந்தப்பட்டதுதான். அதனால் அவைகளுக்குப் பொருத்தம் ஏற்படும் விதத்தில் பொட்டு வைக்கவேண்டும். கோதுமை நிற சரும பெண்களுக்கு எல்லா நிற பொட்டுகளும் பொருத்தமாக இருக்கும்.

## பாடல்




படம்: தில்லு முல்லு
பாடகர்கள் : ரஞ்சித்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்,
யுவன்சங்கர் ராஜா
பாடல் வரிகள் : வாலி

கைபேசி என் கூட
சொல்லாமலே கைவீசி
சென்றாளே நில்லாமலே
நான் இன்று கண்டேனே
மூன்றாம் பிறை
போதாதோ நான்
வாழும் காலம்வரை
அவளின் அழகு
அனலை விடவும்
அதிகம் கொதிக்குதே
கொதிக்க கொதிக்க குஷியில்
எனது இதயம் குதிக்குதே
யார் மீது காதல்
எப்போது பூக்கும்
யார் சொல்லக் கூடும்
சொல்லாமல் தாக்கும்
என் ஜாதகம்
காதல் யோகம்
(கைபேசி என் கூட....)

இதயத்தில் யார்க்கும்
இடமில்லை என்று
தினசரி தாழ்போட்டு
நான் பூட்டினேன்
உடைத்ததை நீயே
உள்புகுந்தாயே
தலைவிதி உன் கையில்
நான் மாட்டினேன்
உலகெல்லாம் உறங்கையில்
உயிரை நீ தயிரைப்போல்
கடைகிறாய்
உணர்ச்சியில் கிறங்கையில்
மனதை நீ
மலர் வண்டாய்
குடைகிறாய்.... ஓ......ஓ....

எனக்கென நீதான்
எழுதிடும் கடிதம்
படிக்கிறேன் அன்பே
உன் பேஸ்புக்கில்தான்
அடிக்கடி நான்தான்
நிலைதடுமாறி
விழுகிறேன் கண்ணே
உன் கிரேஸ் லுக்கில்தான்
விடையில்லா கேள்வி நீ
நிலக்கரி ஊழல்போல் நீள்கிறாய்
தடைகளை தகர்த்து நீ
அடிமையை அரசிபோல்
ஆள்கிறாய் ஓ..... ஓ.......
(கைபேசி என்கூட....)
(கைபேசி என்கூட....)

# அம்மாவாக நடிக்க ரெடி:

## சிம்ரன் அதிரடி அறிவிப்பு



தமிழ் சினிமாவில் நாயகியாக இருந்து ரசிகர்களின் மனதை கொள்ளை கொண்டவர் சிம்ரன். அதன் பின் திருமணம் செய்து கொண்டு சினிமாவுக்கு டாட்டா காட்டிவிட்டார். இந்நிலையில் மறுபடியும் நடிக்க வந்த சிம்ரனுக்கு, வாரணம் ஆயிரம் படத்தின் மூலம் வாய்ப்பு கொடுத்தார் கௌதம் மேனன். தற்போது மீண்டும் சூர்யா நடிக்கும் துருவ நட்சத்திரம் படத்தில் சிம்ரன் நடிக்கிறார். முதலில் அம்மா கதாபாத்திரத்தில் நடிக்க யோசித்த சிம்ரன், தற்போது இளம் நாயகர்களின் அம்மாவாக நடிக்க ரெடி என்று கூறியுள்ளாராம்.

## ஹீரோ வாய்ப்பை தவிர்க்கும் சூரி!

பரோட்டா சூரியை ஹீரோவாக நடிக்க சிலர் அழைக்கின்றனர். ஆனால், அவரோ இப்போது நடித்து வரும் ரம்மி, பட்டயக்கிளப்பு பாண்டியா உள்ளிட்ட சில படங்களில் ஹீரோவுக்கு இணையான வேடத்தில் தான் நடிக்கிறேன். இந்த நேரத்தில் நான் சோலோ ஹீரோவாக நடித்து அந்தப் படங்கள் ஓடவில்லை என்றால் இருக்கிற மரியாதையும் போய்விடும். அதனால் இன்னும் கொஞ்சக் காலம் போகட்டும். அதன் பின் ஹீரோவாக நடிப்பது பற்றி யோசிக்கலாம்... என்று ஹீரோ வாய்ப்புகளை திருப்பி அனுப்பி வருகிறார் சூரி.

## இளம் நடிகைகளுடன் டூயட் பாட ஆசைப்படும் சிவகார்த்திகேயன்



தமிழில் கேடி பில்லா கில்லாடி ரங்கா, எதிர்நீச்சல் படங்களின் வெற்றியைத் தொடர்ந்து முன்னணி நடிகராக வளர்ந்து வருகிறார் சிவகார்த்திகேயன். எனவே இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, எப்படியாவது மேல் தட்டிலும் குதித்து விட வேண்டும் என்று நினைக்கிறாராம்.

இதற்காக தான் நடிக்கும் படங்களில் மார்க்கெட்டில் முன்னணியில் இருக்கும் நடிகைகள் தன்னுடன் டூயட் பாட வேண்டும் என்றும் ஆசைப்படுகிறாராம்.

இப்போது தன்னிடம் யார் கதை சொல்ல வந்தாலும், முன்னதாக தான் நடிக்க விரும்பும் நாயகிகளின் பட்டியலை எடுத்துப் போடுகிறாராம்.

இந்த நடிகைகளில் யாரையாவது நாயகியாக உங்களால் நடிக்க வைக்க முடியும் என்றால் மட்டும் கதை சொல்லுங்கள் கேட்கிறேன் என்கிறாராம்.

அப்படித்தான் ஏ.ஆர்.முருகதாஸ் தயாரிக்கும் படத்திற்கு கதை சொல்லச் சென்றபோதும் சமந்தா, ஸ்ருதிஹாசன், ஹன்சிகா போன்ற நடிகைகளின் பெயரை முன் வைத்திருக்கிறார்.

இதில் ஸ்ருதிஹாசன், சமந்தாவிடம் சிவகார்த்திகேயனுக்கு ஜோடி என்ற சொன்னதும் பதிலே பேசவில்லையாம். ஆனால் ஹன்சிகா மட்டும் ஏ.ஆர்.முருகதாசுக்காக சம்மதம் சொல்லியிருக்கிறாராம்.



## பிரசன்னாவுடன் ஜோடி சேர முடியலையே! வருத்தத்தில் சினேகா

'அச்சமுண்டு அச்சமுண்டு' படத்தில் இணைந்து நடித்த சினேகா - பிரசன்னாவுக்கு காதல் பற்றிக் கொண்டு திருமணமும் செய்து கொண்டனர்.

திருமணத்திற்கு பிறகு இருவரும் விளம்பரப் படங்களில் இணைந்து நடித்து வருகின்றனர். இருப்பினும், மீண்டும் படத்தில் இணைந்து நடிக்க முடியவில்லையே என வருத்தத்தில் இருக்கிறாராம் சினேகா.

சினி



## அக்டோபரில் விஸ்வரூபம்-2



கமல் இயக்கி நடித்து வரும் விஸ்வரூபம் - 2 படப்பிடிப்பு இந்தியாவை தொடர்ந்து தற்போது தாய்லாந்தில் நடந்து வருகிறது. அங்குள்ள மலைப்பிரதேசங்களில் செட் போட்டு படமாக்கி வரும் கமல் படப்பிடிப்பு ஒரு பக்கம் நடந்தாலும் இன்னொரு பக்கம் எடிட்டிங், டப்பிங் உள்ளிட்ட பணிகளையும் முடுக்கிவிட்டுள்ளார். அதனால் அடுத்த ஆண்டு தான் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்ட விஸ்வரூபம் - 2 இந்த ஆண்டு அக்டோபரில் கண்டிப்பாக திரைக்கு வந்து விடும் என்கின்றனர்.

## தீவிரவாதிகளுடன் மோதும் நமீதா

தற்போது நமீதாவின் கைவசம் இருக்கும் ஒரே படம் இளமை ஊஞ்சல். இப்படத்தில் ஐந்து நடிகைகளை தீவிரவாதிகள் கடத்திச் செல்ல பொலிஸான நமீதா அவர்களை மீட்பது தான் கதை. அதிரடியான கதாபாத்திரம் என்பதால் விஜயசாந்தி ரேஞ்சுக்கு ஆக்ஷன் கோதாவிலும் குதித்துள்ள நமீதா பறந்து பறந்து, சண்டை செய்திருப்பதோடு துப்பாக்கியால் வில்லன்களை சுட்டு வீழ்த்தும் காட்சியிலும் நடித்து வருகிறார்.



இதற்குக் காரணம் அவர்கள் நடித்த விளம்பரப்பட நடிப்புக்கு நல்ல வரவேற்பு இருப்பதுதான்.

சிலர் உங்கள் இருவரது நடிப்பில் அதிக அந்நியோன்யம் தெரிகிறது, நடிப்பும் இயல்பாக உள்ளது என்றும் சான்றிதழ் வழங்கியுள்ளனராம்.

இதனால் மிகுந்த உற்சாகத்தில் இருக்கும் சினேகா, இந்த வேகத்தோடு சினிமாவில் மீண்டும் காதல் கணவர் பிரசன்னாவோடு ஜோடி சேர்ந்து நடித்து விட வேண்டும் என்ற ஆசையில் இருக்கிறார்.



## கதாசிரியரான ஏ.ஆர்.ரஹ்மான்!

அமெரிக்காவில் இருந்து சென்னைக்கு இடம் பெயர்ந்த ஏ.ஆர். ரஹ்மான் வரும்போதே இரண்டு படங்களுக்கான திரைக்கதைகளை தயார் செய்துகொண்டு வந்துள்ளார். ஆனால் அந்த கதைகளை அவர் இயக்கவில்லை. ஒரு இந்திப் பட டைரக்டரிடம் அந்த கதைகளை இயக்கச் சொல்லி கொடுத்திருக்கும் ரஹ்மான் அந்தப் படங்களை தமிழ், இந்தி என இரண்டு மொழிகளிலும் வெளியிடப் போவதாக கூறுகிறார்.

## பாடல்



படம் : சிவாஜி
இசை : ஏ.ஆர். ரஹ்மான்
பாடியவர் : ஹரிஹரன், மதுஸ்ரீ
வரிகள் : வைரமுத்து

ஆம்பல் ஆம்பல் மௌவல் மௌவல்(2)

பூம்பாவாய் ஆம்பல் ஆம்பல்
புன்னகையோ மௌவல் மௌவல்

உன் பூவிழி பார்வை போதுமடி
என் பூங்கா இலைகளும் மலருமடி
உன் கால்கொலுசொலிகள் போதுமடி
பல கவிஞர்கள் கற்பனை தவிடுபொடி

வாஜி வாஜி வாஜி என் ஜீவன் சிவாஜி(2)

அன்பால் பார்வையிடு அழகை சாவியிடு
உன் ஆண் வாசனை என் மேனியில்
நீ பூசிவிடு
அடி நெட்டை நிலவே ரெட்டைத் திமிரே
நெஞ்சில் முட்டிக் கொல்லு

வாஜி வாஜி வாஜி என் ஜீவன் சிவாஜி(2)

(பூம்பாவாய் ஆம்பல் ஆம்பல்)

ஒரு வெண்ணிலவை மணக்கும்
மன்மதன் நான்
என் தேன் நிலவே ஒரு நிலவுடன்தான்
அவள் யாருமில்லை இதோ இதோ
இவள்தான்
புன்னகை பேரரசே தேன்குளத்து
பூவுக்குள் குளிப்பேனா
புன்னகை பேரரசே தேன்குளத்து
பூவுக்குள் குளிப்பேனா
விடியும்வரை மார்புக்குள் இருப்பேனா
விழிகளுக்குள் சிறுதுயில் கொள்வேனா
ஓ பெண்களிடம் சொல்வது குறைவு
செய்வது அதிகம் செயல்புயல் நாண்டி

வாஜி வாஜி வாஜி என் ஜீவன் சிவாஜி(2)

(பூம்பாவாய் ஆம்பல் ஆம்பல்)

பொன்வாக்கியமே வாய்வாத்தியமே
உன் வளைவுகளில் உள்ள நெளிவுகளில்
வந்து ஒளிந்துகொண்டேன்
சுகம் சுகம் கண்டேன்
ஆனந்தவெறியில் நான் ஆடைகளில்
பூமியை முடிந்து கொண்டேன்
விண்வெளியில் ஜதி சொல்லி ஆடி
வெண்ணிலவை சகதியும்
ஆக்கி விட்டேன்
அடடடா குமரியின் வரங்கள்
குழந்தையின் சிணுங்கல்
முரண்பாட்டு மூட்டை நீ

வாஜி வாஜி வாஜி என் ஜீவன் சிவாஜி(2)

(ஓ பூம்பாவாய் ஆம்பல் ஆம்பல்)



# ராமா, நீ தயாரா?

ஒருமுறை கிருஷ்ண தேவராயரின் அவையிலிருந்த அமைச்சர்கள், ''நாங்களும் தெனாலிராமன் போல புத்திசாலிகள்தானே! எங்கள் புத்திசாலித்தனத்தைக் காட்ட வாய்ப்புத் தரக்கூடாதா?'' என்று கேட்டனர்.

இந்த அமைச்சர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்று நினைத்துக் கொண்ட அரசர்,

''சரி, உங்களுக்கு ஒரு வாய்ப்புத் தருகிறேன். எனக்கு ஒரு அடி நீள புகை வேண்டும். கொண்டு வருவீர்களா?'' என்றார்.

அமைச்சர்கள் திகைத்துப் போனார்கள்.

''எப்படிப் புகையைப் பிடிக்க முடியும்? அளக்க முடியும்?'' என்று புரியாமல் குழம்பிப் போய் நின்றனர்.

கடைசியில் அரசர், ''உங்களால் முடியாததால் ராமனை முயற்சி செய்யச் சொல்வோம்....'' என்றவர், ராமனைப் பார்த்து, ''ராமா, நீ தயாரா?'' என்று கேட்டார்.

ராமன் துள்ளிக் குதித்து, ''இதோ கொண்டு வருகிறேன்...'' என்றபடியே ஓடினான்.

சிறிது நேரத்தில் வந்தான்.

ஒரு அடி நீள கண்ணாடிக் குடுவை ஒன்றை எடுத்து, ஊதுபத்தி அருகே கொண்டு சென்று ஒரு பக்கம் மட்டுமே திறந்திருந்த அந்தக் குழாயின் வாய்ப் பகுதியை புகைக்கு நேராகக் காட்டினான். மெல்ல, குழாய் முழுவதும் புகை பரவி நின்றது.

''அரசே, இதோ நீங்கள் கேட்ட ஒரு அடி நீள புகை!'' என்றான் தெனாலிராமன்.

கிருஷ்ணதேவராயர் புன்னகையுடன், ''எந்தப் பிரச்சினையிலும் பயந்துவிடாமல் சமயோசிதமாக செயல்பட்டால் உடனடி தீர்வு கிட்டும்...'' என்றார்.

அமைச்சர்கள் அனைவரும் தலைகளைக் குனிந்து கொண்டனர்.

# தபால் பெட்டியின் கதை!

1500 ஆம் ஆண்டில் புதிய நாடுகளைக் கண்டு பிடிக்கப் புறப்பட்டார் போர்த்துக்கீசிய மாலுமி பார்த்தலோமியே டயஸ். அவருடன் மேலும் சில மாலுமிகளும் கடற்பயணம் செய்தனர்.

அவர்கள் பயணம் செய்த கப்பல் தென்னாபிரிக்காவில் புயலில் சிக்கியது. அப்போது மாலுமி டயஸ் மரணமடைந்தார். அவர் பயணம் செய்த கப்பல் தென்னாபிரிக்கக் கடற்கரைத் தீவு ஒன்றில் ஒதுங்கியது. உயிர் பிழைத்த மாலுமி ஒருவர், தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை ஒரு கடிதத்தில் எழுதி, அதைத் தன்னுடைய காலணிக்குள் போட்டு ஒரு மரத்தில் தொங்கவிட்டுச் சென்றார்.

பத்து மாதங்களுக்குப் பிறகு அந்தத் தீவுக்கு வந்த மற்றொரு போர்த்துக்கீசிய மாலுமியான ஜோஆடாநோவா என்பவர் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த அந்தக் காலணியைத் தற்செயலாகப் பார்த்தார். உள்ளே இருந்த கடிதத்தைக் கண்டு விவரம் தெரிந்து கொண்டார்.

அதிலிருந்து அந்தத் தீவுக்கு வருபவர்கள் அந்தக் காலணியையே கடிதங்கள் போடும் பெட்டியாகப் பயன்படுத்த ஆரம்பித்தனர். இதுவே உலகின் முதல் தபால் பெட்டி.

தென் ஆபிரிக்காவிலுள்ள மோசல் என்னுமிடத்தில் இன்றும் அந்த மரம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அந்த மரத்தில் காலணி வடிவ தபால் பெட்டி ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது.

தபால் பெட்டிக்கு சிவப்பு நிறம் பூசும் வழக்கம் உலகில் முதன்முறையாக 1874 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் லண்டனில் தொடங்கியது.



# இம்சை அரசிக் கொசு!



- கொசுக்களுக்கு வெள்ளை, மஞ்சள் நிறங்களைக் கண்டால் பிடிக்காது.
- கொசுக்களில் பெண் கொசுக்கள் மட்டுமே நம்மைக் கடிக்கும்.
- ஆண் கொசுக்களுக்கு செடி, இலை, தழைகளே உணவாகின்றன.
- கொசு நம்மைத் தேடி வரும்போது விநாடிக்கு 250 முதல் 600 தடவைகள் வரை அதன் சிறகுகளை அடித்துக் கொள்ளும்.
- உலகில் 2700 வகை கொசு இனங்கள் உள்ளன.
- கொசு இனங்களில் சில பகல் நேரங்களிலும், சில அந்தி நேரத்திலும், மற்றவை இரவு நேரத்திலும் கடிக்கக் கூடியவை.
- ஒரு சொட்டு இரத்தம் 20 கொசுக்களுக்கு உணவாகிறது.

# இதயம் எடுக்கும் ஓய்வு



இதயம் தொடர்ந்து துடித்துக் கொண்டிருப்பதால்தான் நாமெல்லாம் உயிர் வாழ்கிறோம். ஆனால் இதயமும் ஓய்வெடுக்கும் என்பதை நீங்கள் அறிவீர்களா?

இதயம் ஒரு முறை துடிக்க 0.49 விநாடிகள் எடுத்துக் கொள்கிறது. இடையில் 0.31 விநாடிகள் இடைவெளி (ஓய்வு) விடுகிறது.

# உலகின் மிகப் பெரிய ஏரி!

உலகின் மிகப் பெரிய ஏரி காஸ்பியன் ஏரி என்று அறிந்திருப்பீர்கள். ஆனால் அதில் கடல் நீர் உள்ளது.

நல்ல நீர் ஏரிகளில் கொள்ளளவிலும் ஆழத்திலும் மிகப் பெரிய ஏரி ரஷ்யாவின் சைபீரியாவிலுள்ள பைகால் ஏரி.

பைகால் என்ற ரஷ்ய மொழிச் சொல்லுக்கு ''வளம் மிக்க'' என்று பொருள்.

விண்வெளியில் இருந்து பார்த்தால் பாதி திறந்திருக்கும் ஊதா நிறக் கண்ணைப் போன்ற தோற்றத்தில் இந்த ஏரி காட்சியளிக்கும்.

உலகில் உள்ள மொத்த நீரில் 20 சதவீதம் பைகால் ஏரியில் உள்ளது.

இந்த ஏரியின் ஆழம் ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது என்கிறார்கள். இந்த ஏரியின் அடியில் வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. ஓர் ஆண்டில் சுமார் 5 மாதங்களுக்கு இந்த ஏரி உறைந்து காணப்படும்.

யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னங்களில் ஒன்றாக இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

Colour: Cyan Magenta Black

10. தியலும, லக்சபான, துங்கிந்த, பம்பரகந்த என்பன இலங்கையின் பிரதான

1] நதிகளாகும்

2] மின்உற்பத்தி நிலையங்களாகும்

3] நீர்வீழ்ச்சிகளாகும்

4] குளங்களாகும்

11. பூச்சிகளின் உடற்பகுதிகள் பிரதானமாக எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது?

1] 2 2] 3

3] 4 4] 6

12. இரவில் வானத்தை அவதானிக்கும்போது, பல உடுக்கோலங்களைக் காணலாம். கீழே காணப்படும் உடுக்கோலங்களில் விருட்சிகம் வடிவத்தைக் காட்டுவது எது?

1] 

2] 

3] 

4] 

13. **"கண்ணையடித்தாரார் கற்பகத்தைத் தொட்டாரார் தொட்டாரைச் சொல்லியழு தோள்விலங்கு போட்டுவைப்போம்."**
மேலே தரப்பட்டுள்ள பாடல் எந்தக் கிராமியப் பாடலுடன் தொடர்புபட்டது?

1] தாலாட்டு 2] சாய்ந்தாடம்மா

3] ஒப்பாரி 4] கப்பற்பாட்டு

14. காற்றினால் பரவும் வித்தைக் கொண்ட தாவரம் எது?

1] தென்னை 2] எருக்கலை

3] மாங்காய் 4] துத்திரி

15. மிகச் சரியான விதத்தில் உலர் மின்கலங்கள் இடப்பட்டுள்ள மின்சூளைக் காட்டும் உரு எது?

1] 

2] 

3] 


4] 

16. ஒத்த நிலைமைகளின் கீழே பயிரிடப்படும் பின்வரும் வித்துக்களிடையே விரைவில் முளைக்கும் வித்து வகை?

1] மிளகாய் 2] கடுகு

3] பாகல் 4] வெண்டி

17. **ஒரு வியாபாரி 5 நாட்களில் விற்றபாலின் அளவு தொடர்பான வரைவு கீழே தரப்பட்டுள்ளது. இந்த வரைபின் உதவியுடன் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**




01. திங்கட்கிழமை விற்ற பாலின் அளவு எவ்வளவு?

[____________லீற்றர்]

02. ஞாயிறு, திங்கள் ஆகிய இரு நாட்களிலும் விற்ற பாலின் மொத்த அளவு எவ்வளவு?

[____________ லீற்றர்]

03. புதன்கிழமையை விட, ஞாயிற்றுக்கிழமை எவ்வளவு பால் கூடுதலாக விற்கப்பட்டது?

[____________ லீற்றர்]

04. ஒரு லீற்றர் பால் ரூபா 32.00 எனில், செவ்வாய்க்கிழமை விற்ற பாலினால் பெற்ற வருமானம் யாது?

[______ரூபா ______ சதம்]

05. பால் நிரப்பப்பட்டுள்ள பாத்திரங்கள் 5 லீற்றர் கொள்ளக்கூடியவை எனில், வியாழக்கிழமை விற்ற பால் பாத்திரங்களின் தொகை எவ்வளவு?

____________________

06. ஞாயிற்றுக்கிழமை விற்கப்பட்ட பாலின் அளவு, வேறு இரண்டு நாட்களில் விற்கப்பட்ட பாலின் அளவைவிட மிகவும் அதிகமாகும். அந்த இரு நாட்களின் பெயரையும் எழுதுக.

1] ____________________

2] ____________________

**18. கணித்து எழுதுக.**

01. விரித்து வைக்கப்பட்ட ஓர் அகராதியின் வலப்பக்கத்திலுள்ள பக்க எண் 3009 ஆகும். அடுத்ததாக விரிக்கும்போது வரும் பக்கங்கள் இரண்டினதும் எண்களை முறையே எழுதுக.

1]

2]

02. ஒரு தோடம்பழத்தின் விலை ரூபா 9.50 எனில், 16 தோடம் பழங்களுக்காகக் கொடுக்க வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

[________ ரூபா ________ சதம்]

03. உறை ஒன்றில் 3 வீதம் 621 சவர்க்காரக்கட்டிகளைக் கடதாசி உறையினுள் போடுதல் வேண்டும். இதற்குத் தேவையான உறைகள் எவ்வளவு?


________________

04. ஓர் இனிப்புப் பானப் போத்தல் 4 பேரை உபசரிக்கப் போதுமானது. 26 பேரை உபசரிக்கத் தேவையான இனிப்புப் பானப் போத்தல்களின் எண்ணிக்கை யாது?

________________

05. சுகந்தனின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் 30 km ஆகும். அவன் பாடசாலைக்கு அத்தூரத்தின் 1/5 இனைச் சைக்கிளில் சென்றான். மீதித் தூரத்தைப் புகையிரதத்தில் சென்றான். அவன் புகையிரதத்தில் சென்ற தூரம் எவ்வளவு?

[________________ km]

06.  காட்டப்பட்டுள்ள செவ்வக உருவில் செங்கோணமுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

________________

07.  உருவில் நிழற்றப்படாத பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக.

________________

08. 30km 50m இதனை மீற்றரில் எழுதுக.

09.  இதன் விளிம்புகள் எத்தனை?

10. கூட்டுக. $\frac{1}{6} + \frac{1}{3} =$

11. $\frac{1}{2} - \frac{1}{8} =$

12. பாத்தியொன்றில் 16 மிளகாய்க்கன்றுகள் நடப்பட்டுள்ளன. அவ்வாறான 14 பாத்திகளில் நடப்பட்டுள்ள மிளகாய்க் கன்றுகளின் எண்ணிக்கை யாது?

________________

13. 1 லீற்றர் 750 மில்லி லீற்றர் குளிர்பானம் 5 பிள்ளைகளுக்குச் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. அவர்களில் ஒருவர் பெறும் குளிர்பானத்தின் அளவு யாது?

14. மு.ப 7.45 க்கு வீட்டிலிருந்து புறப்பட்ட பேருந்து 50 நிமிடங்கள் பயணித்து பாடசாலையை அடைந்தது. அது பாடசாலையைச் சென்றடைந்த நேரம் யாது?

**19. " பாடசாலை விடுமுறை தினம் ஒன்றில் நானும் எனது நண்பர்களும் சேர்ந்து ஓர் அழகிய பட்டத்தைக் கட்டினோம். அதை ஏற்றி மகிழ்வதற்காக நாங்கள் கடற்கரைக்குச் சென்றோம்..........** என்னும் சம்பவத்தைத் தொடர்ந்து ஆறு வாக்கியங்கள் எழுதுக. [எழுவாய் பயனிலைத் தொடர்பு திருத்தமான ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.]

1] ________________

2] ________________

3] ________________

4] ________________

5] ________________

6] ________________

## கல்விக்குரல்

விடைத்தாள்

சென்ற வாரம் வெளியாகிய வினாப்பத்திரத்திற்கான விடைகள்

புலமைப்பரிசில் பரீட்சை பிரபல ஆசிரியர், கொழும்பு

**பகுதி - 01**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) 03 | 02) 02 | 03) 03 | 04) 02 | 05) 03 | 06) 03 | 07) 01 | 08) 02 |
| 09) 01 | 10) 02 | 11) 02 | 12) 01 | 13) 03 | 14) 03 | 15) 02 | 16) 04 |
| 17) 03 | 18) 03 | 19) 02 | 20) 01 | 21) 03 | 22) 01 | 23) 01 | 24) 02 |
| 25) 01 | 26) 03 | 27) 01 | 28) 03 | 29) 03 | 30) 02 | 31) 01 | 32) 01 |
| 33) 04 34) 02 | 35) 03 36) 02 | 37) 03 | 38) 02 | 39) 40 | 40) ஈசானமூலை | | |


**பகுதி - 02**


01. i) அணில் ii) மரங்களில் உள்ள பழங்கள் iii) அற்புதம்
02. i) இறைவன் / ஈசன் ii) தரு / விருட்சம் iii) கனிகள் iv) உயிரினம்
03) i) அகலம் ii) காடு
04) i) உடல்+அமைப்பு ii) வாழ்வு+இடம் iii) விரும்பி+உண்பேன்
05) அடுக்குத் தொடர்
06) எதையும் ஆராய்ந்தே செய்தல் வேண்டும்
07) கோபம் அறிவைக் கெடுத்துவிடும்
08) தீர்க்கதரிசி
09) கன்னிக்கவிதை
10) 1 fish
2 house
3 bottle
4 cloth
11) i) நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்/ வசிக்கிறீர்கள் ii) இது என்ன நிறம் ?
12) 1 பாட்டுப் பாடுவோம்
2 இன்று திங்கட்கிழமை
13) கேம கமு


14) 1
15) 2
16) 3
17) 1
18) 2
19) 1
20) 1
21) 3 22) 3
23) 01 24) 1
25) 02 26) 03
27) 03 28) 02
29) 02 30) 01
31) 03 32) 1,2
33) 01 34) 02
35) 04 36) 01

37) 200 இனிப்புக்கள்
38) ரூபா 1692/=
39) 20 cm
40) 6kg900g
41) i) 56m ii) $40m^2$
43) i) 15 ii) 15 iii) - iv) 145
44) பொருத்தமான ஆறு வாக்கியங்கள்

18. இரண்டு தட்டுள்ள தராசில் ஒரு தட்டில் ஒரு கிலோ கனமான இரும்பும் மற்றைய தட்டில் ஒரு கிலோ இலேசான பஞ்சும் வைக்கப்பட்டிருக்கின்றன. தராசின் நிறையைக் காட்டும் படம் பின்வருவனவற்றுள் எது?

1) 


2) 


3) 


19. 2004ஆம் ஆண்டு லீப் வருடமாகும். லீப் வருடமொன்றில் பெப்ரவரி மாதத்தில் 29 நாட்கள் இருக்கும். இதன்படி அடுத்து வரக்கூடிய லீப் வருடங்கள் எவை?

1) 2016, 2020

2) 2015, 2018

3) 2007, 2011


20. சுமதியின் உண்டியலில் மூன்று வகையான 12 நாணயங்கள் இருந்தன. அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 30 ஆகும். உண்டியலில் இருந்த நாணயங்கள் எவை?



1) ரூபா 5 நாணயங்கள் 2, ரூபா 2 நாணயங்கள் 7, ரூபா 1 நாணயங்கள் 3

2) ரூபா 5 நாணயங்கள் 3, ரூபா 2 நாணயங்கள் 5, ரூபா 1 நாணயங்கள் 4

3) ரூபா 5 நாணயங்கள் 3, ரூபா 2 நாணயங்கள் 6, ரூபா 1 நாணயங்கள் 3

★ **21ஆம்,22ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்ட படத்துடன் நெருங்கிய தொடர்புடைய படத்தைத் தெரிவு செய்க.**

21.  1)  2)  3) 

22.  1)  2)  3) 

★ **கீழே நிகழ்வுகள் ஐந்து தரப்பட்டுள்ளன. அந்நிகழ்வுகளால் ஒரு சம்பவம் கூறப்படுகின்றது. அவை ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. சரியான ஒழுங்கைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.**

23. X - **ஆசிரியை வகுப்புக்கு வருகின்றார்.**

Y - **பிள்ளைகள் பாடத்தை அவதானிக்கின்றனர்.**


Z - **ஆசிரியை பாடத்தைக் கற்பிக்கின்றார்.**

O - **மணி அடிக்கின்றது.**


H - **பிள்ளைகள் ஆசிரியைக்கு மரியாதை செலுத்துகின்றனர்.**

1) XZYOH
2) OXHZY
3) OHXZY

★ **படங்களின் இடைவெளிக்குப் பொருத்தமான பகுதியைத் தரப்பட்டுள்ள படங்களில் இருந்து தெரிவு செய்க.**

24. 

1) 

2) 


3) 

25. மண்டபம் ஒன்றில் போடப்பட்டிருந்த கதிரை நிரை ஒன்றில் வலப்பக்கத்திலிருந்து 16 ஆவது கதிரையில் மாலா அமர்ந்திருந்தாள். இடது பக்கமாக இருந்து பார்க்கும் போது மாலா அமர்ந்திருக்கும் கதிரை, ஒன்பதாவது இடத்தில் இருந்தது. அந்த நிரையில் இருந்த கதிரைகள் எத்தனை?
1) 24
2) 25
3) 19

★ கீழுள்ள வரிப்படத்தில் வட்டத்தினால் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றும் பிள்ளைகளையும், செவ்வகத்தினால் 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் பங்குபற்றும் பிள்ளைகளையும், முக்கோணியினால் 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் பங்குபற்றும் பிள்ளைகளையும் காட்டப்பட்டுள்ளது.

**அதன்படி 26ஆம், 27ஆம் வினாக்களில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

26. மூன்று போட்டிகளிலும் பங்குபற்றுபவன் யார்?
1) சுமன்
2) ராஜா
3) மாதவன்




27. 200, 400 மீற்றர் போட்டியில் ஏதாவது ஒன்றில் பங்குபற்றாதவன் யார்?
1) சுமன்
2) ராஜா
3) குமார்

★ **கூற்றுக்கு ஏற்ற உவமைத் தொடரைத் தெரிவு செய்க.**

28. பெறுமதியான ஒன்றால் எவருக்கும் பிரயோசனம் இல்லை என்பது,
 1) நகமும் சதையும் போல
 2) காட்டில் எறித்த நிலாப் போல
 3) சிறகற்ற பறவை போல

★ **29ஆம், 30ஆம் வினாக்களில் முதலில் கொடுக்கப்பட்டுள்ள கூற்றிற்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

29. கோழியையும் அதன் குஞ்சுகளையும் வருணிப்பதற்குப் பொருத்தமான உவமையாக அமைவது,
 1) முற்றத்தில் மணல் பரம்பியிருப்பது போல
 2) ஆகாயத்தில் காணப்படும் நிலவும் நட்சத்திரங்களும் போல
 3) பந்தலில் கட்டப்பட்டுள்ள அலங்கார மின்விளக்குகள் போல

30. "**அலைமோதும்போதே தலை முழுகு**" என்பதற்கு ஒத்த பழமொழி
 1) ஆழமறியாமல் காலை விடாதே
 2) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
 3) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

31. நிசாரினதும், நிலாமினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 40 வருடங்கள் ஆகும். நிசாரினது வயது நிலாமினது வயதின் நான்கு மடங்காகும். எனின், நிலாமின் வயது யாது?
 1) 8 வருடங்கள்
 2) 10வருடங்கள்
 3) 32 வருடங்கள்

32. புகைப்படம் ஒன்றைக் கையில் எடுத்த பிள்ளையொன்று "**இந்தப் புகைப்படத்தில் உள்ளவரின் சகோதரி எனது தாயாவாள்**" எனக் கூறியது. புகைப்படத்தில் உள்ளவர் பிள்ளைக்கு என்ன உறவு முறையாவார்?
 1) பாட்டன்
 2) சிற்றப்பா
 3) மாமா

33. காந்தனின் வயது சுமனின் வயதைப் போல் மூன்று மடங்காகும். குமாரின் வயது காந்தனின் வயதைப்போல் மூன்று மடங்கு ஆகும். இவர்கள் மூவரின் வயதுகளினதும் கூட்டுத்தொகை 39 வருடங்கள் ஆகும். எனின், குமாரின் வயது யாது?
 1) 12 வருடங்கள்
 2) 15 வருடங்கள்
 3) 27 வருடங்கள்


34. எண் தொடர்புகளைக் கவனித்து அதற்கு ஏற்ப -?- இனால் காட்டப்படும் எண் எது எனத் தெரிவு செய்க.

5 △ 1 ◯ 3 = 12
9 △ 4 ◯ 1 = 5
7 △ 5 ◯ 3 = ?

 1) 15
 2) 5
 3) 6

35. இல்ல விளையாட்டுப் போட்டியிலே மறவர் இல்லம் சூரர் இல்லத்தைவிட அதிக புள்ளிகளைப் பெற்றாலும் வீரர் இல்லத்தைவிட மிகக் குறைந்த புள்ளிகளையே பெற்றிருந்தது. இப்போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற இல்லங்களை வரிசைக் கிரமப்படி குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.
 1) சூரர், வீரர், மறவர்
 2) வீரர், சூரர், மறவர்
 3) வீரர், மறவர், சூரர்

36. ஒரு காகிதம் கீழே காட்டியவாறு மூன்றுமுறை மடிக்கப்பட்டு அதில் ஒரு பகுதி நீக்கப்பட்டது. அக் காகிதத்தை மீண்டும் விரித்தால் எப்படி அமையும் என்பதைக் காட்டும் படத்தைத் தெரிவு செய்க.




1) 2) 3)

★ **37 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய விடையினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

37. நிமலினதும் விமலினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 65 கிலோக்கிராம் ஆகும். நிமல், விமல், கமல் ஆகியோரது நிறைகளின் கூட்டுத்தொகை 98 கிலோ கிராம் ஆகும். கமலின் நிறை எத்தனை கிலோக்கிராம்?

(............)

38.  இத் தொட்டியை நிரப்ப இப் பாத்திரத்தால் எவ்வளவு தடவை நீர் ஊற்ற வேண்டும்?

(............)

39. ■ + ▲ = 8 ▲ − ● = 3 ● X ■ = 6

▲ இதன் பெறுமானம் என்ன?

(............)


40. பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரைப் பூரணப்படுத்துக.

**இடமிருந்து வலம்**

மேசையுடன் தொடர்புடையது

**மேலிருந்து கீழ்**

இது தினமும் மாறும்





# மாணவ சமூகத்திற்கே முன்னுதாரணமான மதுஷிகா குமாரி!

பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும். இந்தக் காலத்தில் அற்ப பணத்திற்காக கூடப்பிறந்த சொந்தங்களையே பழி தீர்த்துக் கொள்ளும் சம்பவங்களை நிறையவே கண்டிருக்கின்றோம். அப்படிப்பட்ட பணத் திற்காக நாயாய், பேயாய் அலையும் மனிதர் மத்தியில் சின்னஞ் சிறு மாணவி அனைவருக்கும் முன்னுதாரணமாக நடந்து கொண்ட சம்பவம் கடந்த வாரம் பதிவாகியது.

தெல்தெனிய குடாபல்லேக பகுதியைச் சேர்ந்த தனியார் பஸ் சேவையாளர் சரத்தின் அன்பு புதல்வி மதுஷிகா குமாரி (9 வயது) தெதிகம ஆரம்பப் பாடசாலையில் தரம் 4 இல் கல்வி கற்கிறாள்.

படிப்பிலும், விளையாட்டிலும் கெட்டிக்காரியான மதுஷிகா எப்போதும் துருதுருவென இருப்பாள். வழமைபோல கடந்த வாரம் பாடசாலை முடிவடைந்து தனது சகோதரனுடன் வீடு நோக்கி வந்து கொண்டிருந்த சமயம் தெதிகம நகரின் வீதியோரத்தில் பையொன்று கிடப்பதைக் கண்டாள். பையை எடுத்து திறந்து பார்த்த அவளுக்கு பெரிய ஆச்சரியம். பையில் ஆயிரம் ரூபா நோட்டுக்களாக பணமும் சில ஆவணங்களும் இருந்தன.

பையை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் செல்லாமல் பாடசாலையில் ஆசிரியர் சொல்லிக் கொடுத்ததை ஞாபகப்படுத்திக் கொண்டாள். நமக்கு சொந்தமில்லாத பொருளை உரியவரிடம் ஒப்படைப்பது சிறந்தது என தனது ஆசிரியர் சொல்லிக் கொடுத்தது அவளுக்கு நினைவுக்கு வந்தது.

பையில் இருந்த பண வைப்புப் புத்தகத்தை பார்த்ததும் அவளுக்கு யோசனை மின்னியது. இப்பையை வங்கியில் ஒப்படைப்பது சிறந்தது என. அதன் பிரகாரம் பையை எடுத்துக் கொண்டு தெதிகமவில் உள்ள வங்கிக்கு சென்றாள். ஒரு சிறு மாணவி வங்கிக்கு வருவதைக் கண்ட ஊழியர் என்ன? ஏது என விசாரித்தார் மதுஷிகாவிடம்.

தான் பாடசாலை விட்டு நடந்து வரும் வழியில் பையொன்றைக் கண்டதாகவும் அதில் பணம் இருந்ததாகவும் கூறி அப்பையை வங்கி அதிகாரியிடம் ஒப்படைத்தாள். ஆச்சரியப்பட்டு போன அதிகாரி அம்மாணவியை வெகுவாகப் பாராட்டிவிட்டு பைக்குள் இருந்த பண வைப்புப் புத்தகத்திலிருந்த விலாசத்தைக் கொண்டு உரியவரை கண்டு பிடித்தார்.

ஜயலத்கந்த கிராமத்தைச் சேர்ந்த கே.ஆர்.குணரத்ன மெனிக்கே எனும் 74 வயதுடைய பாட்டியின் பணமே கண்டெடுக்கப்பட்ட அப்பணம் என்பதை அறிந்து கொண்டார்.

இராணுவத்தில் பலியான தனது மகனின் கொடுப்பனவுப் பணத்தை வங்கியிலிருந்து எடுத்து வரும் வழியிலேயே அவ்வயோதிப மாது 28,000 ரூபாவைத் தவறவிட்டுள்ளார். மீண்டும் தனது பணம் கிடைக்கப் பெற்றதையிட்டு அவர் மிகவும் மகிழ்ந்து போனதுடன் தனது பணத்தை நேர்மையாக ஒப்படைத்த அந்த சிறிய மாணவியைக் காண தெதிகம ஆரம்பப் பாடசாலைக்கு சென்றார். பாடசாலை அதிபர், ஆசிரியர்களிடம் மதுஷிகாவின் நேர்மையை கூறியதுடன் அம்மாணவிக்கு சன்மானமும் வழங்கினார்.

மதுஷிகாவின் இச்செயற்பாடு பாடசாலை அதிபர், ஆசிரியர், பெற்றோருக்கு மட்டும் பெருமை சேர்க்கும் விடயமல்ல அனைத்து மாணவர்களுக்கும் முன்னுதாரணமான செயற்பாடாகவும் அமைந்துவிட்டது. நேர்மையாக நடந்துகொண்ட மதுஷிகாவை உதயசூரியனும் வாழ்த்துகின்றது.

எம்.தாசன்

## ஆசிரியைகள் விபசாரத்தில் மாணவிகள் கர்ப்பம்



தனக்கு இஷ்டமில்லாமலும் காதல் இல்லாமலும் பணம், வயிற்றுப்பிழைப்பு மற்றும் வேறு நிர்ப்பந்தம் உள்ளிட் டவைக்கு இணங்குவதே விபசாரம் என்று சொல்லப்படுகின்றது. அதுமட்டுமன்றி விபசாரத்தை பழைய தொழில் என்றும் கூறுவர்.

விபசாரம் 4000 ஆண்டுக்கு முன்னரே மொசப்பத்தேனியா என அழைக்கப்பட்ட ஈராக்கில் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்ற வரலாற்று ஆதாரங்கள் சான்று பகருகின்றன.

இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளில் விபசாரம் 3000 ஆண்டுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என தகவல்கள் தெரிவிக்கின்றன. அப்படி ஆரம்பிக்கப்பட்ட இந்த விபசாரம் பல பெண்களின் வாழ்க்கையை மட்டுமல்ல குடும்பங்களையே சீரழித்துக்கொண்டிருக்கின்றது.

பலர் தெரிந்து சில நிர்ப்பந்தங்களால் விபசாரத்தில் ஈடுபடுகின்றனர். இன்னும் சிலர் பலவந்தமாக இதில் தள்ளப்படுகின்றனர்.

ஆனால், சமூகத்திற்கு வழிகாட்டவேண்டிய ஆசிரியைகளே விபசாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதுடன் மாணவிகளையும் அதற்குள் உட்படுத்தியுள்ளமை தொடர்பான தகவல்கள் மத்திய மாகாணத்தில் வெளியாகியுள்ளன.

மாத்தளை மாவட்டத்திலுள்ள பிரபல்யமான பாடசாலையைச்சேர்ந்த ஆசிரியைகளே இவ்வாறு விபசாரத்தில் ஈடுபடுவதாக மாத்தளை பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அண்மையில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கை தொடர்பில் பாடசாலை அதிபரோ, நிர்வாகமோ எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதாகவும் இந்த கூட்டத்தின்போது தெரிவித்துள்ளமை வெட்கித் தலைகுனியவைக்கின்றது.

எதிர்கால கனவோடு வெள்ளை ஆடையுடன் பாடசாலைக்கு வரும் மாணவிகளின் ஆடை களில் மட்டுமல்ல அவர்களின் வாழ்க்கையையே கறைபடியவைக்கும் இவ்வாறான செயற்பாடுகளினால் ஆசிரிய சமூகமே வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது. இந்த பாடசாலையின் ஆசிரியைகள் மாணவிகளை ஏமாற்றி தங்களுடைய வலைக்குள் சிக்கவைத்துள்ளதாகவும், இதனால் குறித்த அந்த பாடசாலையைச்சேர்ந்த மாணவிகள் சிலர் கர்ப்பம் தரித்துள்ளதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன. குறித்த பாடசாலையில் ஐந்து ஆசிரியைகளே இவ்வாறு விபசாரத்தில் ஈடுபடுவதாக அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அதுதொடர்பில் பாராளுமன்றம் மற்றும் கல்வியமைச்சின் கவனத்திற்கும் ஜனாதிபதியின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலகம் சீர்கெட்டுப் போய்க்கொண்டிருக்கின்ற நிலையில் தங்களுடைய பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதுமட்டுமே தங்களுடைய பொறுப்பென பெற்றோர்கள் நினைப்பதுடன் மட்டுமே நின்றுவிடாது தங்களுடைய பிள்ளைகளின் ஒவ்வொரு அசைவுகளிலும் கண்ணும் கருத்துமாக இருப்பது காலத்தின் கட்டாயமாக இருக்கின்றது.

குறிக்கோளுடன் பாடசாலைக்கு செல்லும் மாணவிகளின் வாழ்க்கையில் ஒருசில ஆசிரியர்கள் இன்றேல் ஆசிரியைகள் விளையாடுவது முழு ஆசிரியர் சமூகத்தையும் வெட்கித் தலைகுனிய வைக்கும் செயலாகும்.

சமூக சீர்கேடுகளிலிருந்து சிக்கிக்கொள்ளாமல் இருப்பதற்கு பரந்த மட்டத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும் என்பது மட்டுமன்றி விபசாரம் முழுமையாக ஒழிக்கப்படல் வேண்டுமென்றால் சமூக மட்டத்திலும் சகல விடயங்கள் தொடர்பிலும் பொதுவான அறிவு ஏற்படுத்தப்படுவது கட்டாயமானதாகவே கருதப்படுகின்றது.

- நாடோடி

# அண்ணன் கொடுத்த பாடகி அந்தஸ்து

இசைக் குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து தன் சகோதரர்களின் வழிகாட்டலில் நம்நாட்டு பாடகர்கள் வரிசையில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்ட இளம் பாடகி கந்தப்பு ஜெயப்பிரதா.

இந்தவாரம் பேஸ்புக் பகுதியினூடாக சில விடயங்களை உங்களோடு பகிர்ந்துகொள்கிறார் ஜெயப்பிரதா!

ஹாய்... எல்லோருக்கும் வணக்கம். என்னுடைய சொந்த ஊர் யாழ்பாணம் கரவெட்டி கிழக்கு. அப்பாவின் தொழில் நிமித்தம் வந்தாரை வாழவைக்கும் வவுனியா மண் என்னையும் வரவேற்றுக் கொண்டது. சிறு வயது முதல் உயர்தரம் வரை வவுனியா விபுலானந்த கல்லூரியில் கற்றேன். தற்பொழுது யாழ் ராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் கர்நாடக சங்கீதம் இரண்டாம் வருட மாணவியாக கல்விகற்று வருகிறேன். கர்நாடக சங்கீத இசைத்துறையிலும், மெல்லிசைத் துறையிலும், சினிமாத் துறையிலும் பிரகாசிக்க வேண்டும் என்பதுதான் எனது விருப்பம்.

எனது தந்தையார் ஒரு பாடகர், நடிகர். இதேபோன்று எனது மாமா கீழ் கரவை குலசேகரன் அவரும் இலங்கையில் பிரபலக் கவிஞர். பல பாடல்களை எழுதியவர். எனது அம்மாவின் சகோதரர்களும் அப்பாவின் சகோதரர்களும் சிறந்த இசைக் கலைஞர்கள். எனது சகோதரர்களான கந்தப்பு ஜெயந்தன், கந்தப்பு ஜெயரூபன் இருவரும் இசைத் துறையில் இருப்பதால் எனக்கும் இசையில் ஆர்வம் வந்தது

இசைத் துறையின் ஆரம்பம் என்று சொன்னால் நான் கல்விகற்ற வவுனியா விபுலானந்த கல்லூரியில் இருந்துதான் தொடங்கியது. எனது இசைப்பயணத்தின் குருக்களாக திருமதி. ஜெகநாதன், திருமதி. சிதம்பரநாதன், ந.லோஜினி ஆகியோரை குறிப்பிடலாம். இவர்களின் வழிகாட்டலில் பாடசாலை மட்டப் போட்டிகள், தமிழ்த் தினப் போட்டிகளில் பல பரிசில்களை பெற்றுள்ளேன்.

ஒரு பாடகி என்ற அந்தஸ்தை முதன்முறையாக கொடுத்தவர் என்னுடைய சகோதரன் இசை அமைப்பாளர் கந்தப்பு ஜெயந்தன் தான். 'இசையில் மாற்றத்தின் ஆரம்பம் நாமே' என்ற இசைத்தொகுப்பில் 'அலையோடு போராடும் கடலே நீ...' என்ற பாடலின் மூலம் அறிமுகமானேன். எனது இசைத்துறையில் மறக்கமுடியாத பாடல் இது.

பின்னர் அண்ணாவின் இசையில் பல பாடல்களை பாடியுள்ளேன். 2008 ஆம் ஆண்டு இளைஞர் சேவைகள் மன்றத்தால் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற போட்டியில் சிறந்த பாடகி என்ற தேசிய விருதும் கிடைத்தது.

தொடர்ந்தும் ராகஸ்வரம் இசைக் குழுவில் தொலைகாட்சி நிகழ்ச்சிகள், வானொலி நிகழ்ச்சிகள், மேடை நிகழ்வுகளிலும் பல பாடல்களைப் பாடி வருகிறேன். மேலும் எனது பாடல்கள் இணையத்தளங்கள் வாயிலாக புலம்பெயர் தேசங்களிலும், உள்நாட்டிலும் மிக பிரபல்யமானது. அந்த வகையில் குறிப்பாக, காந்தள் பூக்கும் தீவிலே, யாழ்தேவி, மொழியே கவிதை, நெஞ்சோடு மோதும் காற்றே, Facebook போன்ற பாடல்கள் மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்தன. அதிலும் Facebook பாடல் இந்திய தொலைக் காட்சியான சத்தியம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி உலகமெங்கும் இலட்சக்கணக்கான ரசிகர்களின் மனங்களை வென்றது.

இதுதவிர, குறும்படங்கள் பலவற்றிலும் பல பாடல்களை பாடியுள்ளேன். கந்தையா ஸ்ரீ கந்தவேள் ஆசிரியருடைய இயக்கத்தில் பள்ளிக்கூடம் குறும்படத்தில் பாடிய கண்ணீரில் வாழும் என்ற பாடலுக்கு விருதும் கிடைத்தது. இது தவிர விளம்பரங்கள், குறும்படங்களில் குரல் கொடுத்து வருகிறேன். மறைந்த கலைமாமணி T.M.சௌந்தரராஜனின் மகன் செல்வகுமாரோடு இணைந்து பாடியபோது அவரது பாராட்டு கிடைத்ததை என் வாழ்நாளில் மறக்கமுடியாது. அத்தோடு நம்நாட்டின் பிரபல பாடகர் N.ரகுநாதன் ஆசிரியரோடு பல மேடைகளில் பாடியிருக்கிறேன்.

அண்மையில் எனது இசைத்துறைக்காக கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் கைகளால் 'இன்தமிழ் குரலாள்' என்ற பட்டம் கிடைத்தது. இதுவே எனக்கு கிடைத்த முதலாவது பட்டம்.


தற்போது 'என்தீவில் ஒருகாதல்' என்ற திரைப்படத்தில் என்னுடைய சகோதரன் கந்தப்பு ஜெயந்தனின் இசையில் எனது இரண்டாவது அண்ணா கந்தப்பு ஜெயரூபனோடு இணைந்து 'ஒற்றையடிப் பாதையில...' என்ற பாடலைப் பாடியுள்ளேன். மிகவிரைவில் இந்தப் பாடலையும் நீங்கள் கேட்கலாம்.

என்னை இசைத்துறையில் ஊக்கப்படுத்தி இந்தளவு மக்கள் மத்தியில் அறிமுகம் செய்த எனது அண்ணாமார், தந்தை மற்றும், பிரபல பாடகர் ரகுநாதன் சார் மற்றும் வவுனியா ராகஸ்வரம் இசைக்குழுக் கலைஞர்கள். குறிப்பாக பாடகர் S.G.கோபு அங்கிள் அகியோருக்கும் என்னை வழிநடத்திய ஆசிரியர்களுக்கும் நன்றிகள் கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஒவ்வொருவரிடமும் ஒரு திறமை உண்டு. அதை வெளிக்கொணர அனைவரும் முயற்சி செய்யுங்கள் நிச்சயம் முன்னேறலாம்.




எஸ்.ரோஷன்







# நடிகர் மணிவண்ணனின் இறுதி ஊர்வலம்



நடிகர் சிவகுமார்



சத்தியராஜ், மனோபாலா



எஸ்.ஜெ. சூர்யா



கார்த்திக்



அதர்வா



சத்தியராஜ், மணிவண்ணனின் மகன், விஜய்




சரத்குமார்



அம்பிகா



சீமான், பரத்



இறுதி ஊர்வலம்

நடிகரும் இயக்குநருமான மணிவண்ணன் அண்மையில் காலமானார். அவரது இறுதி நிகழ்வில் திரையுலகப் பிரபலங்கள் பலர் கலந்து கொண்டனர்

# தோட்டத்துப் பயல்கள் செய்கின்ற நிகழ்ச்சியை டிக்கட் வாங்கிப் பார்க்க வேண்டுமா?

தோட்டத்துப் பயல்கள் செய்கின்ற நிகழ்ச்சியை டிக்கட் வாங்கி பார்க்க வேண்டுமா? எங்களுக்கு வேறு வேலையில்லையா? என்று பசறையைச் சேர்ந்த முதலாளிகளில் சிலரும், தோட்டங்களைச் சேர்ந்த எம்மவர்களில் பலரினதும் கேலி கிண்டல்களுக்கு மத்தியில் மனம் தளராது தமது நிகழ்ச்சியை மேடையேற்றி சாதித்துக் காட்டியிருக்கின்றார்கள் பசறை தோட்டப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள்.

மலையக தோட்டப்புறங்களை பொறுத்தவரை எத்தனையோ திறமைகளை உடைய இளைஞர், யுவதிகள் காணப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் ஏனைய சமூகத்தினரைவிட தமது திறமைகளை வெளிக்கொணர்வதற்கு எத்தனையோ தடைகளையும், சவால்களையும் சந்திக்க வேண்டியிருக்கிறது.

தோட்டப்புறங்களை பொறுத்தவரை இளைஞர் சமூகம் தமது திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான வசதிவாய்ப்புகள் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. அத்தோடு எம்மவர்களின் எந்த முயற்சிக்கும் பொருளாதாரம் மிகப்பெரும் தடையாகவே இருக்கின்றது. இவ்வாறான காரணங்களால் தோட்டங்களில் உள்ள திறன்மிக்க இளைஞர்களின் திறமைகள் மூடி மறைக்கப்படுவதுடன், அவை தோட்டங்களிலேயே முடங்கிப் போய்விடுகின்றன.

ஆகவே எமது இளைஞர்கள் தமது திறமைகளை வெளிக்கொணர எடுக்கின்ற முயற்சி, சாதிக்கத் துடிக்கின்ற அவர்களின் சாதனை பயணத்திற்கு துணையாக இருக்க வேண்டியது, ஊக்குவிக்க வேண்டியது எமது கடமை.

ஆம் தற்போது விடயத்திற்கு வருவோம். பசறை கமயாவலை தோட்டத்தைச் சேர்ந்த இளைஞன் ரவிக்குமார் சர்வதேச கலைஞர்களுக்கு இணையாக (185) நூற்றி எண்பத்தி ஐந்து குரல்களில் பேசி சாதித்து வருகிறார். அத்தோடு இவர் சிறந்த நடன மற்றும் நகைச்சுவை நடிகராகவும் பரிணமித்து வருகின்றார். இவரின் திறமைக்கு களம் அமைத்துக் கொடுக்கும் முகமாகவும் அவரை ஊக்குவிக்கும் முகமாகவும் தோட்ட இளைஞர்கள் ஒரு சிலர் ஒன்றிணைந்து ஒரு கலை நிகழ்ச்சியை மல்டி ஸ்டார் (MULTI STAR) என்ற பெயரில் மிமிக்ரி, நகைச்சுவை நாடகம், பரதம், மேற்கத்தேய நடனம் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு கலக்கல் நிகழ்ச்சியை கடந்த சனிக்கிழமை பசறை பிரதேச சபை மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிகழ்ச்சிக்கு பெரும் தொகை செலவு செய்ய வேண்டும் என்பதால் குறிப்பிட்ட இளைஞர்கள் டிக்கட் மூலம் பணம் வசூலிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவ்வாறு டிக்கட் விற்பனைசெய்ய குறிப்பிட்ட ஒரு சிலரிடம் சென்றபோது மேலே குறிப்பிட்டதைப் போல வசனம் பேசியிருக்கின்றார்கள்.

தென்னிந்தியாவில் இருந்து வருகின்ற கலைஞர்களின் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்காக ஆயிரக் கணக்கில் செலவு செய்கின்ற நாம் சினிமா, கிரிக்கெட்டுக்காக நூற்றுக் கணக்கில் செலவழிக்கின்ற நாம், சாராயத்திற்காகவும் புகைத்தலுக்காகவும் பெரும் தொகை பணம் வீண்விரயம் செய்யும் எம்மவர்கள் எம்மில் வளர்ந்து வரும் இளம் கலைஞர்களை ஊக்குவிக்க ஒரு டிக்கட் வாங்கினால் குறைந்துவிடவா போகிறோம். சற்று சிந்தித்துப் பாருங்கள் எம்மவர்களை நாம் வளர்க்காமல் வேறு யார் வளர்த்துவிடுவது என்று யோசித்துப் பாருங்கள்.

இந்த ''மல்டி ஸ்டார்'' கலக்கல் நிகழ்ச்சியை பொறுத்தவரை மிக சிறப்பான தரமான நிகழ்ச்சியாகும். தென்னிந்திய கலை நிகழ்ச்சிகளுக்கு இணையாகவே காணப்பட்டது. நிகழ்ச்சி ஆரம்பித்தது முதல் முடியும் வரை மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியதுடன் ஆர்வத்துடன் ரசிக்கக் கூடியதாகவும் இருந்தது. கமயாவலை கலைஞன் ரவிக்குமாரின் மிமிக்கிரி மற்றும் நகைச்சுவை பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தியது. அத்தோடு அவரின் கலைக்குழுவில் உள்ள ஏனைய தோட்டத்து சிறார்கள் மற்றும் இளைஞர்கள் மிக சிறப்பாக தமது திறமைகளை வெளிக்கொணர்ந்திருந்தனர். நிகழ்ச்சியை தொகுத்தளித்த எஸ்.நரேந்திரன் மற்றும் மகாதேவன் சிறந்த அறிவிப்புத்திறனை வெளிக்காட்டியிருந்தனர். அத்தோடு ஒலி, ஒளி அமைப்புகளும் சிறப்பாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஆக மொத்தம் இது ஒரு சுப்பர் கலக்கல் நிகழ்ச்சி. எமது இளைஞர்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் நிகழ்ச்சி.

ஒன்று மட்டும் உண்மை. இவர்கள் தோட்டத்தில் பிறக்காமல் வேறு எங்காவது பிறந்திருந்தால் எங்கோ போயிருப்பார்கள். காரணம் திறமை மிக்கவர்களை வளர்த்துவிடவும் அவர்களை ஊக்குவிக்கும் மனப்பாங்கும் தோட்டங்களில் உள்ள எம்மவர்களில் பெரும்பாலானோருக்கு இல்லை என்பதால் ஆகும்.

இந்நிகழ்ச்சிக்கு தானாகவே முன்வந்து உதவிபுரிந்த ஊவா மாகாண சபை உறுப்பினர் அரவிந்தகுமார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார். அவர் தமது உரையில் திறமை மிக்க கலைஞன் கமயாவலை ரவிக்குமாரினதும், கலைக்குழுவினதும் சாதனை பணத்திற்கு தாம் துணைபுரிவதாகவும் தோட்ட இளைஞர்களாலும் சாதிக்க முடியும் என்பதை நிரூபித்த அவர்களை ஊக்குவிக்க பின்நிற்கப் போவதில்லை எனவும் கூறியதுடன் ஒரு சிறு தொகை நிதியையும் வழங்கிவைத்தார்.

அத்தோடு தமது வளர்ச்சிக்காக வழிகாட்டிய, தமது திறமைக்கு களம் அமைத்துக் கொடுத்த பசறை தமிழ்த் தேசிய கல்லூரியின் பிரதி அதிபர் ஹரிதர் அவர்களுக்கு தமது நன்றிகளையும் குறிப்பிட்ட கலைக்குழு இளைஞர்கள் தெரிவித்து அவரிடம் ஆசிபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே பல திறமைகளை தம்மிடம் வைத்துக் கொண்டு சாதிக்கத் துடிக்கும் கமயாவலை ரவிக்குமாரையும் அவரது கலைக்குழுவினரையும் வளர்த்தெடுக்க வேண்டியது மலையகத்தில் பிறந்த ஒவ்வொருவரினதும் கடமை.

ஆகவே, அவர்களின் நிகழ்ச்சிகளை உங்கள் தோட்டங்களில் ஏதாவது நிகழ்ச்சிகளில் விழாக்களில் மேடையேற்ற விரும்பினால் அவர்களுடைய தொலைபேசி 0712652577 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

சாதிக்கத் துடிக்கும் இந்த கலைஞர்களின் கலை பயணத்திற்கு உதயசூரியன் துணை நிற்கும் என்பதையும் கூறிக்கொள்கிறது.

**எஸ்.சந்திரமோகன்**

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# அரச அதிகாரத்துக்கு ஆட்பட்டு அகதியாகிப்போன பூமாரியம்மன்

**ஏன் மக்கள் போராட்டம் எதனையும் முன்னெடுக்கவில்லை?**

பேச்சுவார்த்தை மூலமே நல்லதொரு தீர்வை பெற்றுவிடலாம் என்று நினைத்தோம். அத்தோடு போராட்டங்களை நடத்தும் அளவுக்கு எங்களுக்கு சக்தியில்லை. இந்தப் பகுதி அதிபாதுகாப்பு வலையம் என்பதால் திருவிழாக்காலங்களில் அனுமதி பெற்று ஊர்வலம் வந்தாலும் எங்களை நிறுத்தி விசாரணை செய்யும் நடவடிக்கையும் காணப்பட்டது. இந்த நிலையில் நாங்கள் போர்க்கொடி தூக்கி மக்களை சங்கடத்தில் தள்ளிவிடும் எண்ணம் இருக்கவில்லை.

**ஆலயத்தை அமைப்பதற்காக தற்போது கொடுக்கப்பட்ட இடம் எங்குள்ளது?**

கொழும்பு - 2 நவம் மாவத்தையில் உள்ள ஒரு இடத்தை எங்களுக்கு வழங்கினார்கள். அங்கு அம்பாளின் பொருட்களை வைப்பதற்கே இடம் போதவில்லை. இந்நிலையில் ஆலயத்தை எவ்வாறு அமைப்பது? அதிலும் கடவுளுக்கென்று சில சம்பிரதாயங்கள் இருக்கின்றன. அதற்கமைவாக அந்த இடத்தில் அம்பாளை வைத்து பூஜிக்க முடியாது. கொழும்பு-3 மக்களுக்கு கொழும்பு-2 இல் கோயில் அமைப்பது சரியில்லை. அவர்களுக்கு அந்த இடத்திலேயே கோயில் வேண்டும்.



**இந்து மத அமைப்புகள் எதனையும் நாடவில்லையா?**

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் முறையிட்டு அவர்களின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு பெறமுயன்றோம். ஆனால் அவர்கள் நாங்கள் அரச ஊழியர்கள். அரசுக்கு எதிராக எதனையும் செய்ய முடியாது என்று கூறி எங்களை கைவிட்டு விட்டார்கள்.

**மனித உரிமை ஆணைக்குழுவிற்கு இது தொடர்பில் அறிவித்தீர்களா?**

முறைப்பாடு செய்தோம். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதியின் இந்து மத விவகார ஆலோசகர் ரவி சர்மா வந்து பார்த்துவிட்டுப் போனார். நல்லதொரு தீர்வு கிடைக்குமென நம்பிக்கையோடு இருந்தோம். ஆனால் அதற்கு பிறகு எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை. ஆச்சார அனுஷ்டானங்களுக்கு உட்பட்ட ஒருவரினால் கூட இந்த விடயத்தில் முன்னின்று செயற்பட முடியவில்லை என்பது எமக்கு பெரும் கவலைதான்.



**சாஸ்திர சம்பிரதாயங்களுக்கு அமைய சிலைகள் இடமாற்றம் செய்யப்பட்டனவா?**

10ஆம் திகதியே கோயில் உடைக்கப்பட இருந்தது. இந்து மதம் சாஸ்திர சம்பிரதாயங்களுக்கு உட்பட்டது. ஒரு கிணறு தோண்டுவதானாலும் பூமி பூஜை செய்தே மேற்கொள்ளப்படும். அதனால் அவகாசம் கேட்டு 12 ஆம் திகதி முறைப்படி பூஜைகள் செய்து உரிய முறையில் சிலைகளை அகற்றினோம்.

**தற்போது ஆலய விக்கிரகங்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளன?**

ஆமர் வீதியில் உள்ள எமது ஆலய நிர்வாக சபை உறுப்பினர் ஒருவரின் வீட்டிலேயே வைக்கப்பட்டுள்ளது. பூஜைகள் எதுவும் இடம்பெறாமல் பூட்டிக்கிடக்கிறது.

**இந்து சமய முறைப்படி கடவுள்களை இடமாற்றம் செய்வது முறையானதா?**

இந்து சாஸ்திர சம்பிரதாயங்களுக்கமைய இப்படி இடமாற்றம் செய்வது முறையானது அல்ல. இதுவரை மனிதர்கள்தான் அகதியாக அலையும் நிலை காணப்பட்டது. இன்று கடவுளும் அகதியாகிவிட்டார்.

**இப்பிரச்சினை தொடர்பில் உங்களின் இறுதித் தீர்மானம் என்ன?**

அம்பாளை தரிசிக்க வரும் பக்தர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு குறையுடனேயே வந்து போகிறார்கள். அப்படி வரும் பக்தர்கள் அம்பாளைப் பார்த்து மேலும் குறைகளுடன் செல்லாமல், மக்களுக்கு எந்தவொரு இடையூறும் இல்லாமல் ஒரு இடம் கிடைத்தால் போதும்.

Colour: Cyan Magenta Black

# கவிதைகள்



## சௌந்தரராஜன் எனும் சமுத்திரம்!

தமிழுலகத்
தவத்தாலே
இசையன்னை
ஈன்றெடுத்த
ஈடில்லா
பெருமகன் நீ!
இசையாலும் எட்ட முடியாத
இமயம் நீ!
வானலையில் ஓடி வந்து
காந்த குரலாலே
கண்ணீர் துடைத்தாய்!
பாமரனின் இதயாசனத்தை
இறுதி வரை
ஆட்சி புரிந்தாய்!
இசையுலகில்
உன் ஆட்சி!
சோழ ஆட்சி போல
சொக்க வைக்கும் பேராட்சி!
உன் நாவில்
சரஸ்வதியின்
சரியாத ஓர் ஆட்சி!
தாரகை நடுவே
தன் மதியாய்
தானிருந்தாய்
தான் என்ற
தலைக்கவசம்
இறுதி வரை
சூடாமலிருந்தாய்
அதனாலே!
சூரியனாய்
சுடர் விட்டாய்!
இசை சமுத்திரத்தில்
இறுதி வரை
அலையாய் நீ
ஆர்ப்பரித்துக் கொண்டிருப்பாய்!

பா.ரிசாந்தன் ஹொப்டன்

## காதலியே!!

மௌனத்தால் விழிகள் அசைத்து
அன்பினால் வருடிய என்
இதயத்தை எங்கே
ஒளித்துக் கொண்டாய் பெண்ணே!
எனது இதயத்துடிப்பின்
வேகத்தைக் கூட்டிவிட்டு
என் அவஸ்தைகளை
ரசிக்கின்றாயா!
நீ இன்றி எனக்கு வாழ்வில்லை
என்று எனக்குள் ஓர் போராட்டம்!
ஏன் இன்னும் மௌனத்தால்
மட்டும் பேசுகின்றாய்!
காதல் என்றால் என்னவென்று
உன்னை கண்டபோதுதான்
அறிந்து கொண்டேன்!
காதலில் அவஸ்தையும் உள்ளது
என்பதையும் இப்போது நான்படும்
வேதனையால் எனக்கு
புரிகிறது பெண்ணே!
வாழ்ந்தால் அது உன்னோடு
இல்லையெனில் என் மரணம்
தீண்டும் வரை உன் நினைவுகளில்
காதலனாய் மட்டும் வாழ்ந்தாலும்
எனக்கு பெரிதும் சந்தோஷமடி!

எம்.யூ.அல்சாத்,
ஓட்டமாவடி.

## நினைவு

என்னைத் தவிர எல்லாவற்றையும்
எடுத்துக் கொண்டாய்
ஒன்றை மற்றும் விட்டுவிட்டாய்
உன் நினைவுகளையும் எடுத்துக்கொள்

இரா.விமலாதித்தன்,
ஹாலி எல



## கல்லூரி நட்பின் இலக்கணம்

அறியா முகங்களை
காண வைத்த கல்லூரியே!
ஆனந்தத்தின் எல்லையும்
அனுபவத்தின் எல்லையும்
அறிவின் தேடலையும்
பெறவைத்த கல்லூரியே
உன்னால் உருவான
கல்லூரி நட்பு - கற்கும் காலம்
முடிந்தது கலைந்து
செல்லுங்கள் என்றால்
நாட்டின் பல பாகத்தில் இருந்து
வந்த எங்கள் நண்பர்களின்
கல்லூரி நட்பு
கலைந்து விடுமே!
இல்லை கனவுகளை நனவாக்கிய
எங்கள் கல்லூரி நட்பு இயற்கை
என்று உயிர் நீங்குமோ
அன்றும் உயிர் நீங்காது!

என்.புஷ்பலதா,
டயகம.

## மூச்சுள்ளவரை....!



தாரகையே! எனக்கான
விடியல் உன்னிடமோ!
என் வாழ்க்கையின் ஆரம்பம்
நீ பெற்ற வரமோ!
என்னவென்று உனைசொல்வேன்
உனக்கான கவி இதனில்
உன்னை கண்ட அந்த நாள்
மாறாத விதிவிளக்கு
மஞ்சள் வெயில் படிந்த
உன் முகம்,
விண் மீன்களுக்கே விடியல் தரும்
உன் கண்கள்...,
முத்து படிந்த சிப்பிபோ
உன் செவிகள்...,
காற்று கூட பெருமை பெறும்
என்னவள் உயிர்ப்பிக்க
மூச்சு கொடுப்பதால்
உண்மையில் நீ உருப்பெற்ற
பத்தாம் கிரகம் தான்.....!
ஏனென்றால்
கண்டவுடன் வியக்க வைத்தாய்
கண்களில் கவி எழுதி
காதலெனும் பரிசளித்தாய்
சோகத்தை சுகமாக்கி
காமத்தை விரக்தி செய்து
விவேகம் கொண்ட அறிவொழுக்கம்
இவை கடந்த அன்பு கொண்டாய்!
நீ என்றால் நான் தான்
என்று உணர்ந்துக் கொண்டேன்
உனக்காக உயிர் துறப்பேன்
எனக்கான மூச்சுள்ளவரை.....!

ஜே.ஹாஷாருடின், நிவித்திகலை.

## உன்னை மறந்திருந்தால்

மரணம் வந்து அழைத்த
போது மரணிக்க
மறுத்து விட்டேன்!
ஆனால்....!
உன்னை மறந்து
இருந்தால்
மறுகணமே நான்
இறந்திருப்பேன்!

எம்.கிருபாகரன்
கந்தே கெதர



## தோழியே!

அழும் குழந்தையை
அரவணைக்கும்
தாயைப் போல
என்னையும் அரவணைப்பாயா?
நானும் உன் அன்பு
பிரசவத்தில் பிறந்த
குழந்தை தானே!
என் நெஞ்சில் இதயத்தை
எடுத்துவிட்டு
உன் பாசத்தை உள் வைத்து
தைத்துவிட்டாய்....!

அ.பாத்திமா சமீரா,
பொகவந்தலாவ.

## படைப்பு

நான் பிறந்ததன்
அர்த்தத்தை
உணர்ந்தேன்
நீ எனக்காக
படைக்கப்பட்டாய்
என்பதால்,

த.கஜேந்திரன்,
ருவான்வெல்ல.

## மௌனம்!




ஆரவாரத்தை விரும்பி
விழித்தெழும்
பகலைப் போலல்லாது
மௌனத்தை விரும்பி
துயில் கொள்கிறதோ இரவு!!

எம்.யூ.அல்சாத், ஓட்டமாவடி.

## என்னவனே!

சந்தித்தவேளை நினைக்கவில்லை
நீதான் என் காதலன் என்று
சிந்தித்த மறுகணமே
நினைத்து விட்டேன்
நீ தான் என் உயிர் என்று
என் காதல் நிஜம்
நீ என்னுடன் சேர்வதும் நிஜம்
நீ என் இதயத்தில் இல்லை
இதயமாகவே இருக்கின்றாய்
உன்னை சேரும் நாளிற்காய்
காத்திருக்கும் உன்னவள்

காவேரி ஜீவன், வவுனியா.



## வாழ்க்கை

அழகிய உலகில்
அன்பாய் காலடி
எடுத்து வைக்கிறேன்
பலநூறு ஆசைகளுடன்
கற்பனைகள் அல்ல - வெறும்
மாயைகளும் அல்ல
வாழ்ந்து பார்
வாழ்வின் ஆழம் புரியும்
என்றனர்
வாழ முன்பே
கருவிலே தாய்
அன்பை இழந்தேன்
சிசுவான பின்
தந்தை அரவணைப்பின்றி
பிழைத்தேன்
பள்ளி சென்றதும்
அண்ணா இல்லை
காலப்போக்கில்
அக்கா எங்கேயோ
அங்கே தங்கையும்!
வாழ வழியின்றி
தவிக்கின்றேன்
என் கண்ணீர் - என்றோ
ஒரு நாள்
விடை தேடும்

எல்.என்.ரிஸ்வியுா
மாவனல்ல

## வாழ்க்கை

வாழ்க்கையின் முதற் பக்கம்
கருவறை
கடைசிப் பக்கம் கல்லறை
நடுவில் இருக்கும் பக்கங்களை
புன்னகையால் எழுது
கண்ணீரால் எழுதி விடாதே!

சி.பிரகாஷ், ஹொப்டன்.

# கல்லாறு-02



**- சி.சந்திரன் -**

ஒரு காலத்தில் என் மாணவப் பருவத்தில், பாடசாலைவிட்டதும் ஓடோடி வந்து இந்த ஆற்றில் குதித்து நேரம் போவது தெரியாமல் மணிக்கணக்காக குளித்ததுண்டு. அதெல்லாம் சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பு.

அந்த ஆற்றைப் பார்த்துக்கொண்டு பழைய நினைவுகளில் மூழ்கி நின்ற நான், என் பயணத்தைத் தொடருகின்றேன். இங்கிருந்து கிட்டத்தட்ட முந்நூறு மீற்றர் தொலைவில் பாடசாலை இருக்கிறது. பாடசாலையைத் தாண்டித்தான் நான் போகவேண்டும். பாடசாலைக்கு வெளியே சில மாணவர்கள் சீருடையுடன் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஏதோ ஒரு வகுப்பு மாணவர்களுக்கு ஒரு ஆசிரியை மரத்தடி நிழலில் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கிறார். பார்ப்பதற்கு மனதிற்கு இதமாக இருக்கிறது. இருபத்தைந்து வருடங்கள் அதாவது கால் நூற்றாண்டுகளிற்குள் எவ்வளவு பெரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று எண்ணிப் பார்க்கும்போது பிரமிப்பாக இருக்கின்றது.

நாங்கள் படித்த காலத்தில் இந்தப் பாடசாலை ஒரே ஒரு கட்டிடத்தில் இயங்கியது. இருபதடி அகலம், அறுபதடி நீளம் கீழே கல் பரவிய தரை. ஐந்தாம் வகுப்பு வரை கற்பிக்கப்படும். இரண்டே இரண்டு ஆசிரியர்கள். எங்களுக்கு சீருடையெல்லாம் அப்போது தெரியாது. ஏதோ கிடைக்கும் சட்டையையும், காற் சட்டையையும், சேட்டையும் போட்டுக்கொண்டு வெறும் காலுடன் செல்வோம். அநேக மாணவர்கள் என்ன நிறம் என்று கண்டுபிடிக்க முடியாத அளவு அழுக்கு சட்டையுடன் கூட வருவார்கள்.

இப்போது பழைய கட்டிடத்தையும் புதுப்பித்து இன்னும் இரண்டு பெரிய கட்டிடங்களையும் நிர்மாணித்து, க.பொ.த.(சா/த) வரை கற்பிக்கப்படுகிறது. பல ஆசிரிய ஆசிரியைகள் கற்பிக்கிறார்கள். மாணவ, மாணவிகள் வெள்ளைச் சீருடையில் மண்ணிறத்தில் வெள்ளைக் கோடுகளுடன் கூடிய 'ரை' அணிந்து, பாடசாலை சின்னத்தையும் சட்டையில் குத்திக்கொண்டு வரும் காட்சி, மனதிற்கு இதமாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறது.

எல்லோருக்குமே, அந்த இளமைக்காலம் பள்ளியில் படித்த அந்த இனிய காலம் அல்லது கடந்தகால நினைவுகள் அதனை மீட்டிப்பார்க்கும் போது இதமாக இருப்பதுண்டு. அந்த இனிய காலம் மீண்டும் வராதா என்ற ஏக்கம் ஏற்படுவதுண்டு. எனக்கு மட்டும் அந்தப் பள்ளியில் படித்தகாலம் ஒரு கசப்பான அனுபவமாகிவிட்டது. இதயத்தில் ஆறாத புண்ணாக இன்னும் வலிக்கிறது.

அந்தக் காலத்தில் அந்தப் பாடசாலையில் இரண்டே இரண்டு ஆசிரியர்கள், ஒருவர் ஹெட் மாஸ்டர் மற்றவர் சின்ன மாஸ்டர்.

ஹெட்மாஸ்டர் சுந்தரலிங்கம் மெலிந்த உயரமான தோற்றம் உடையவர். முரட்டு சுபாவம் உள்ளவர். அவரைக் கண்டாலே மாணவர்கள் நடுங்குவார்கள். அந்த நாட்களில் வறுமையின் காரணமாக பட்டினி கிடக்கவும் நேர்வதுண்டு. அப்படியான காலத்தில் பாடசாலைக்கு வராமல்விட்டு மறுநாள் வந்தால் அடித்து நொருக்கிவிடுவார்.

விவசாயப் பாடம் என்று காய்கறித் தோட்டத் தில் கடுமையான வேலைவாங்குவார். அப்போது கூட ஏதாவது சிறு தவறு நேர்ந்துவிட்டாலும் சிறுவர்கள்தானே என்று ஈவு இரக்கம் பார்க்கமாட்டார். அந்த ஹெட்மாஸ்டருக்குப் பயந்துகொண்டு படிப்பைவிட்டு விட்டு வேலைக்குப் போய்விட்ட மாணவர்கள் ஏராளம்.

மாணவர்கள் படிக்கவேண்டும், முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற அக்கறையில் அடிக்கிறாரா, அல்லது அடிப்பது அவரது குரூரமான குணமா என்பது இன்றுவரை எனக்கும் புரியாத புதிராகவே இருக்கிறது.

ஒரு முறை ஒரு மாணவன் வேறொரு மாணவனின் புத்தகத்தை திருடிவிட்டான். விவகாரம் ஹெட்மாஸ்டர் வரை போய் எல்லா மாணவர்களையும் சோதனையிடும் போது திருடிய மாணவன் அந்தப் புத்தகத்தை எனக்கும் தெரியாமல் என் புத்தகப்பையில் வைத்துவிட்டான். பிறகென்ன திருட்டுப்பட்டம் எனக்குத்தான்.

உண்மை என்னவென்று விசாரித்து அறியாமல் என்னைக் கடுமையாகத் தாக்கி துன்புறுத்தி விட்டார். அன்று அவரிடம் வாங்கிய அடி உதைகளை விட திருடன் என்று குற்றம் சுமத்தப்பட்ட அந்த அவமான உணர்வு அந்த ஆசிரியரின் மீது தீராத வெறுப்பையும் மாறாத ஆத்திரத்தையும் எனக்கு ஏற்படுத்தி விட்டது.

இந்த ஹெட்மாஸ்டருக்கு நேர்மாறான சுபாவம் உடையவர் சின்ன மாஸ்டர், சோமசுந்தரம்.

ஆஜானுபாகுவான தோற்றம், மென்மையான சுபாவம், மாணவர்களிடம் மிகவும் அன்பாகவும், இரக்கமாகவும் நடந்து கொள்வார். தெரியாத பாடத்தை, கணக்குகளை எத்தனை முறை கேட்டாலும் பொறுமையோடு சொல்லித்தருவார்.

முன்பு அவர்,பொலிஸ்காரராக இருந்தவராம், இவருடைய இரக்க சுபாவத்திற்கு பொலிஸ் வேலை ஒத்துவரவில்லை போலிருக்கிறது. அதனால் இந்த தோட்டப் பாடசாலையில் ஆசிரியராக சேர்ந்து விட்டார்.

பாடசாலைக்கு சமீபமாக ஒரு சின்ன குவாட்டர்ஸ், அதில்தான் அவரும் அவர் மனைவியும் ஒரு மகனும் குடியிருந்தார்கள்.அந்த அம்மாவின் பெயர் மனோகரி, அவர்களின் மகனுக்கு ஒரு வயது இருக்கும். அந்த அம்மா ஆசிரியரைப் போலவே இரக்க சுபாவம் உடையவர்.அதோடு பார்ப்பதற்கு மகாலட்சுமியைப் போல் இருப்பார். அவர்களிடம் எனக்கு மிகுந்த மரியாதையும் அன்பும் இருந்தது. அவாவும் எனக்கு டீச்சராகிப்போனார்.

அந்த சின்னமாஸ்டரிடம் தான் ஆங்கிலம் கற்க என் அப்பா ஏற்பாடு செய்திருந்தார். ஆங்கில ஆரம்பக்கல்வியை அவரிடம் தான் கற்றேன்.

பாடசாலை விட்டபின்பும் நின்று அவரிடம் ஆங்கிலம் கற்பேன்.

(தொடரும்...)

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி

**20.06.13 முதல்**

**26.06.13 வரை**

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | தாமதம் | வெற்றி | தனம் | சுகம் | செலவு | நன்மை | சாந்தம் |
| ரிஷபம் | இலாபம் | கோபம் | நட்பு | நட்பு | குழப்பம் | பக்தி | ஜெயம் |
| மிதுனம் | ஆதரவு | குழப்பம் | சுபம் | பாராட்டு | ஆரோக்கியம் | வெற்றி | விருத்தி |
| கடகம் | சிந்தனை | விருத்தி | பயம் | ஆதாயம் | வெற்றி | சுகம் | இலாபம் |
| சிம்மம் | தனம் | அசதி | பரிசு | தாமதம் | சுகம் | பயம் | உயர்வு |
| கன்னி | வெற்றி | பாராட்டு | வெற்றி | விருப்பம் | நட்பு | நஷ்டம் | முயற்சி |
| துலாம் | நன்மை | நலம் | ஏமாற்றம் | விவேகம் | அமைதி | பாராட்டு | யோகம் |
| விருச்சிகம் | பொறுமை | வாழ்வு | ஓய்வு | தோல்வி | கவனம் | குழப்பம் | பரிவு |
| தனுசு | நஷ்டம் | சிரத்தை | நலம் | அலைச்சல் | முயற்சி | ஆரோக்கியம் | பிரயாணம் |
| மகரம் | பயம் | பணி[illegible] | அமைதி | வெற்றி | ஆர்வம் | ஆர்வம் | நன்மை |
| கும்பம் | பக்தி | ஆர்வம் | சலனம் | நன்மை | பயம் | விவேகம் | நட்பு |
| மீனம் | இன்பம் | சுகம் | ஆக்கம் | பக்தி | அனுகூலம் | மேன்மை | வெற்றி |

## மடுல்சீமை தமிழ் வித்தியாலயத்தின் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படுமா?

மடுல்சீமை தமிழ் வித்தியாலயத்தில் போதிய குடிநீர் வசதி இன்மையால் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

எழுநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் இந்த பாடசாலையில் ஒரு குழாய் மூலமே நீர் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இது மாணவர்களுக்கு போதுமானதாக இல்லை. இதனால் மாணவர்கள் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள தோட்டக் குடியிருப்புகளுக்கு சென்றே தமது குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

அத்தோடு பாடசாலையில் உள்ள மலசல கூடங்களுக்கு உரிய நீர்வசதி ஏற்படுத்திக் கொடுக்காமையினால் மாணவ, மாணவிகள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். பாடசாலையின் மலசல கூடம் துர்நாற்றம் வீசுவதுடன் ஒரு சில மலசல கூடங்கள் பாவனைக்கு உகந்ததாகவும் இல்லை. இதனால் பெரும்பாலும் மாணவிகளே பெரும் அசௌகரியத்தை எதிர்கொள்கின்றனர்.

இவ் விடயம் சம்பந்தமாக பெற்றோர்கள் ஒரு சிலரிடம் கருத்து கேட்டபொழுது; இப்பாடசாலைக்கு உரிய குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பாடசாலை நிர்வாகம் அதனை உரிய முறையில் மேற்பார்வை செய்வதோ, சிறந்த முறையில் அவற்றை பராமரிப்பதோ இல்லை எனவும் குற்றம் சுமத்தினர்.

இவ்விடயம் சம்பந்தமாக பாடசாலையின் சிற்றூழியரிடம் கேட்டபோது; நாம் தினந்தோறும் நீர்க்குழாய்களை திருத்துவதுதான் வேலை. நாம் முதல் நாள் திருத்தினால் அடுத்தநாள் வேலைக்கு வரும்போது உடைந்து காணப்படும். காரணம் பாடசாலைக்கு வருகின்ற நீர்க் குழாய்களை உடைத்து பாடசாலைக்கு அருகாமையிலுள்ள குடியிருப்புகளில் உள்ளவர்கள் நீர்பெற்றுச் செல்கின்றனர். அத்தோடு பாடசாலை மைதானத்திற்கு விளையாட வருகின்ற இளைஞர்களும் உடைத்து விடுகின்றார்கள். மேலும் குடிநீர்குழாய் தொகுதிகள் பல பழுதடைந்து காணப்படுவதால் அவற்றை திருத்த வேண்டிய நிலை காணப்படுகிறது எனவும் தெரிவித்தனர்.

பாடசாலைக்கான நீரை பெற்றுக் கொள்வதற்கான வசதி வாய்ப்புகள் காணப்படுகின்ற போதும் உரிய பராமரிப்பு இன்றியும் வெளியார் பாடசாலைக்கு செல்கின்ற நீர்க்குழாய்களை உடைப்பதாலுமே இப்பாடசாலைக்கு நீர் பற்றாக்குறை ஏற்படுகின்றது.

ஆகவே பாடசாலைக்கு அருகாமையில் உள்ள தோட்ட மக்கள் மாணவர்களின் நலன் கருதி பாடசாலை நீர்க்குழாய்களை சேதப்படுத்துவதையும் அதனை உடைத்து அதில் இருந்து நீர் பெறுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பாடசாலை நிர்வாகத்தைப் பொறுத்தவரை இது பெரும் பிரச்சினை இல்லை. மிக இலகுவாக தீர்க்கக்கூடிய பிரச்சினையே. நிர்வாகத்தின் அசமந்தமே பாடசாலையில் குடிநீர்ப் பிரச்சினை தொடர்வதற்கு காரணமாகும். ஆகவே இப்பாடசாலையின் குடிநீர் பிரச்சினையை தீர்த்து வைக்க பிரதேச சபையின் உபதலைவர் பி.சுரேஸ், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர்கள் முன்வர வேண்டும்.

ஹுனுகலை நிருபர்

## கராத்தேயில் மலையக மாணவர்கள் ஈடுபாடு காட்ட வேண்டும்

கேகாலை மாவட்ட கராத்தே தோ சம்மேளனத்தின் 2013-2014 இற்கான நிர்வாகத் தேர்தல் அண்மையில் சப்ரகமுவ மாகாண சபைக்குச் சொந்தமான இன்டோர் ஸ்டேடியத்தில் இலங்கை கராத்தே தோ சம்மேளனத்தின் கண்காணிப்பில் நடத்தப்பட்டது.

இத் தேர்தலின் படி ஒ.எம்.டி.கே.சில்வா தலைவராகவும், பொதுச் செயலாளராக கே.சிவகுமார், பொருளாளராக டி.கே.சனத்குமார ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பொதுச்செயலாளராக தெரிவு செய்யப்பட்ட கே.சிவகுமார் தேசிய மட்டத்தில் கறுப்புப் பட்டி 1 ஆம் இடத்தையும், சர்வதேச மட்டத்தில் கறுப்புப் பட்டி 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளதோடு, கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை பாடசாலை கராத்தே தோ சங்கத்தில் கராத்தே பயிற்றுவிப்பாளராகவும் செயற்பட்டு வருகிறார். கராத்தே சம்பந்தமாக கருத்து தெரிவித்த கே.சிவகுமார்; இன்று கராத்தே விளையாட்டானது தேசிய விளையாட்டாக விளையாட்டுத்துறை அமைச்சில் உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டு இலங்கை கராத்தே தோ சம்மேளனம் என்ற அமைப்பை உருவாக்கியுள்ளது. இந்த அமைப்பின் ஊடாக வருடம் தோறும் பல கராத்தே போட்டிகள் மாவட்டம், மாகாணம், அகில இலங்கை ரீதியில் நடத்தப்படுவதோடு வெற்றி பெறுபவர்கள் வெளிநாடுகளில் நடைபெறும் சர்வதேச மட்டப் போட்டிகளில் பங்குபற்றுகின்றனர். அத்துடன் தேசிய விளையாட்டு விழாவில் கராத்தே இணைக்கப்பட்டுள்ளதோடு இதில் பிரதேச செயலகத்தின் ஊடாக பங்குபற்றவும் முடியும். மேலும் பாடசாலைகளில் கராத்தே மாணவ, மாணவிகளுக்கு பயிற்றுவிக்கப்பட்டு போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இவை அனைத்தும் நடைபெறுகின்ற போதும் மலையக மாணவ, மாணவிகள் கராத்தே விளையாட்டில் பிரகாசிப்பது மிகவும் குறைவு. மலையகத்தில் கராத்தே பயிற்சிகளை நடத்தும் பயிற்சியாளர்கள் ஏராளமானோர் இருக்கின்றார்கள்.



நமது மாணவர்கள் திறமையானவர்கள். அவர்களுக்கு சரியான பாதையை காட்டினோமானால் நிச்சயம் எதிர்காலத்தில் கராத்தே விளையாட்டில் மலையகம் பல வெற்றிகளை பெறும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

மேலும் மலையகத்தில் கராத்தே விளையாட்டை முன்னோக்கி நகர பல திட்டங்களையும் பயிற்சிகளையும் மேற்கொள்ளும் எமது பயணத்தில் இணைந்து கொள்ளுமாறு சகலரையும் கேட்டுக்கொள்கிறேன். கராத்தே சம்பந்தமான சகல விடயங்களையும் 0714706297/ 0723324111 என்ற இலக்கங்களினூடாக தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.





"என் நண்பன் ஒரே நாளில் புகைபிடிப்பதை விட்டுவிட்டான், குடிப்பதை விட்டுவிட்டான், சீட்டாடுவதை விட்டுவிட்டான். பெண்கள் பின்னால் சுற்றுவதை விட்டுவிட்டான். எல்லாக் கெட்ட பழக்கங்களையும் விட்டுவிட்டான்.

"ஆச்சரியமாக இருக்கிறதே எப்படி அவனால் எல்லா கெட்ட பழக்கங்களையும் விட முடிந்தது?"

"நேற்று அவன் இறந்துவிட்டான்"

காக்கா என்னதான் கறுப்பா இருந்தாலும் அது போடுற முட்டை வெள்ளைதான். முட்டை என்னதான் வெள்ளையா இருந்தாலும் அதுக்குள்ள இருக்கிற காக்கா கறுப்புதான்.

சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்தது அல்ல. அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்ததாகும்.

கெட்ட பழக்கம் முதலில் யாத்திரிகனைப் போல வரும். பிறகு விருந்தாளியாகி, இறுதியில் அதுவே முதலாளி ஆகிவிடும்.

சீட்டுக்கட்டை சரியாகக் கலைக்கவில்லை என்று சொல்லிக்கொண்டிருப்போம், நம் கைகளுக்கு நல்ல சீட்டுக் கிடைக்கும் வரை.

## கஞ்சன்

கஞ்சன் ஒருவனைப் புலி ஒன்று கௌவிக்கொண்டு சென்றது. அவனுடைய மகன் புலிக்குப் பின்னால் ஓடி வந்தான். வில் அம்புகளோடு புலியை அவன் குறி வைக்கையில் புலியின் வாயிலிருந்து எட்டிப் பார்த்து தந்தை சொன்னான், "காலைப் பார்த்து அம்பு விடு. புலியின் உடலில் எங்காவது பட்டு தோல் வீணாகிவிடப்போகிறது."



உங்கள் குழந்தைகளுக்கு நல்ல வாழ்க்கை அமைய வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் அவர்களுக்கு எப்போதும் கொஞ்சம் பசியும் குளிரும் இருக்கும்படி செய்யுங்கள்.

# கொஞ்சம் சிரிக்க சிந்திக்க

இருக்கிற செல்வம் போதுமென்று திருப்தி அடைவது சரிதான். ஆனால் இருக்கிற திறமை போதுமென்று நினைப்பது சரியல்ல.

இன்றைய என் பசிக்கு உணவு அளிக்காது பிறகு சொர்க்கத்தைக் கொடுக்கும் இறைவன் மீது எனக்கு நம்பிக்கை இல்லை.

அடுத்தவனுக்கு ஆறுதல் சொல்லும்போது இருக்கும் தைரியம், தனக்குத் தேவைப்படும்போது அடுத்தவனிடம் போய்விடுகிறது.

நீங்கள் ஒரு வாய்ப்பைத் தவறவிட்டால் உங்கள் விழிகளைக் கண்ணீரால் நிரப்பாதீர்கள்! உங்கள் கண்ணீர், உங்கள் முன் உள்ள இன்னொரு வாய்ப்பை மறைத்துவிடும்! அழகிய புன்னகையுடன் எதிர்கொள்ளுங்கள்!

ராமு: ஏண்டா கணக்கு செய்யும்போது உறுமுற?
சோமு: என்னைக் கணக்குல புலின்னு மத்தவங்க சொல்லணும் இல்லையா?


## என்னைத் தெரிந்துகொள்ள

ஒரு ஞானி தினமும் பிச்சை எடுத்து உணவருந்துவது வழக்கம். அவர் மீது பக்தி கொண்டிருந்த அந்நாட்டு அரசி அவருக்கு தங்கத்தாலான ஒரு பிச்சைப் பாத்திரத்தை வழங்கினார். அதன்பின் அதிலேயே அவர் பிச்சை வாங்கி வந்தார். ஒருநாள் ஒரு திருடன் பாத்திரத்தைப் பார்த்துவிட்டான். அதை எப்படியும் திருடி விடுவது என்று எண்ணி அவரைப் பின் தொடர்ந்தான். ஞானியும் அன்று இரவு ஒரு மடத்தில் தங்கிச் சாப்பிட்டார். திருடனைப் பார்த்த அவர் அவனுடைய எண்ணம் அறிந்து அப்பாத்திரத்தை அவன் இருந்த பக்கம் எறிந்தார். திருடனால் இதை நம்ப முடியவில்லை. அவர் அவனை தன் பக்கம் வரவழைக்கவே இப்படிச் செய்தார்.

அதேபோல அவனும் அவரிடம் வந்து தங்கப் பாத்திரத்தை அவரிடம் திரும்பக் கொடுத்தான். அதற்கு அவர் அதை அவனுக்கு ஏற்கனவே பரிசாக அளித்து விட்டதாகக் கூறினார். திருடன் நம்ப முடியாமல், "இதனுடைய விலை என்ன தெரியுமா?" என்று கேட்டான். அதற்கு அவர் சொன்னார், "நான் என்னை அறிந்து வைத்திருப்பதால் வேறு எதுவும் எனக்கு விலை உயர்ந்த பொருளாகத் தெரியவில்லை". உடனே திருடன், "நான் என்னை எப்படித் தெரிந்து கொள்வது?" என்று கேட்டான்.

அதற்கு அவர், "திருடும்போது சுய உணர்வோடு, எச்சரிக்கையோடு கவனத்தோடு இரு" என்றார். அதன்பின் திருடன் இரண்டு முறை திருட முயற்சி செய்தான். ஆனால் அவன் ஞானி சொன்னதுபோல சுய உணர்வோடு இருந்தபோது செல்வம் எதையும் திருட அவனுக்கு விருப்பம் வரவில்லை. கடைசியாக வெறுங்கையோடு ஞானியிடம் வந்தான். அவருடைய சீடனானான்.

போதிக்கிற பலரும் தாம் போதிக்கிற சுகத்திற்காகப் போதிக்கிறார்களே தவிர மற்றவர் திருந்த வேண்டும் என்பதற்காக அல்ல. திருந்திவிட்டால் நமக்கு வேலை இல்லாமல் போய்விடுமே என்கிற பயமும் அவர்களுக்கு உண்டு.




நடத்துநர்: அண்ணே நான் மூணு தடவை விசில் அடிச்சும் ஏன் வண்டி நிக்கலை
ட்ரைவர்: டேய் பொறம்போக்கு. நான் ஆறு தடவை பிரேக் அடிச்சே நிக்கலை. நீ விசில் அடிச்சா மட்டும் நின்னுடுமா?

★★★



நான் வேலை வெட்டிக்கு போகாமல் இருக்கிறதால என் அப்பா என் பெயரையே மாத்திட்டாருடா..!
எப்படி...?
வெற்றிவேல் என்கிற என் பெயரை வெட்டிவேல் என்று மாத்திட்டாரு!




மகன் : அப்பா நான் 10 ஏ எடுத்து பாஸ்பண்ணினா உங்களுக்கு எப்படியிருக்கும்?
அப்பா :- எனக்கு சந்தோஷத்துல ஹார்ட் அட்டாக்கே வந்திடும்.
மகன் : அப்படி எந்த அசம்பாவிதம் நடந்திடக் கூடாதுன்னுதான் நான் பெயிலாகிட்டேன் அப்பா.



நாம அடிச்சா அது மொட்டை!
அதுவா விழுந்தா சொட்டை!
மண்டையிலே போடறது Dye
மண்டையப் போடறது Die

# அர்த்த ஜாமத்தில் வழி மறித்த ஆண் பேய்



நகர்ப்புறங்களைவிட கிராமப்புறங்களில் தான் அதிகம் பேய்க்கதைகள் உலவும். சன சந்தடி அதிக மற்ற அந்தச் சூழ்நிலை பயத்திற்கு வித்திடுவதோடு அங்கே பேய்களை நம்புகிற மக்கள் தொகையும் அதிகம்.

இவர்கள் பாமரர்கள். அதுதான் பேய், பிசாசு என நம்புகிறார்கள் என நான் அவர்களை நினைத்துப் பரிதாபப்படுவது உண்டு.

ஆனால் சில வருடங்களுக்கு முன் நான் சந்தித்த அனுபவம் என்வாழ்வில் மறக்க முடியாத பதிவாகி விட்டது.

நான் கொழும்பில் தனியார் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றுகிறேன். காலை மாலை என எனது பணிநேரம் மாறுபடும். காலையில் வேலை என்றால் மாலை 6 மணிக்கு எனது ஷிப்ட் முடியும். பிற்பகல் 2 மணி ஷிப்ட் என்றால் வேலை முடிய இரவு 12 மணியாகிவிடும். இரவு வேலை என்றால் நாங்கள் அங்கேயே தங்கியிருந்துவிட்டு மறுநாள்தான் வீடு திரும்புவோம்.

சில வருடங்களுக்கு முன் ஒரு நாள் இரவு வேலை முடித்து வீடு திரும்ப வேண்டியிருந்தது. ஆம் மறுநாள் வீட்டில் ஒரு முக்கியமான வேலை. என் தங்கையின் திருமண ஏற்பாடுகள் வீட்டில் நடந்து கொண்டிருந்தன. எனவே இரவு வேலை முடித்து எப்படியும் வீடு செல்வதென தீர்மானித்தேன். உடன் என் நண்பன் ரமேஷும் வந்தான்.

இருவரும் அதிகாலை 2 மணியளவில் எனது ஊர் வந்து சேர்ந்தோம். பஸ்ஸைவிட்டு இறங்கி சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் நடந்து செல்ல வேண்டும்.

அது ஜனவரி மாதமாகையால் பனிக்குளிர் உடம்பைக் குத்தியது.

சுவெட்டர், மப்ளர் என உடம்பை குளிரிலிருந்து போர்த்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தோம்.

சுமார் அரை கிலோ மீற்றர் தூரம் நடந்திருப்போம். தூரத்தில் ஒரு வெளிச்சம் தெரிந்தது. முதலில் சிறிதாக தெரிந்த வெளிச்சம் பின் கொஞ்சம் கொஞ்சமாக பெரிதானது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். இந்த நேரத்தில் சாதாரணமாக வீதியில் சன நடமாட்டமே இருக்காது. ஆக இந்த வெளிச்சம் எப்படி! எங்களுக்குள் முளைத்த கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை.

எங்களுக்கு முன்னால் தெரிந்த வெளிச்சம் நகர்வதாகத் தெரியவில்லை. ஒரே இடத்தில் அசைவற்று நின்றது. நாம் அந்த வெளிச்சத்தின் அருகில் செல்லச் செல்ல ஒளி மங்கியது. ஒரு பத்தடி தூரத்தில் இருக்கும்போது வெளிச்சம் மெல்ல மெல்ல மறைந்தே போனது. எங்கள் இருவருக்கும் உதறல் எடுத்தது. என்றாலும் வெளிக்காட்டிக் கொள்ளாது பயணத்தைத் தொடர்ந்தோம்.

ஒரு பத்தடி தூரம் சென்றிருப்போம் ஒரு மரத்தின் அடியில் யாரோ நிற்பதைப் போலிருந்தது.

உற்றுப் பார்த்தபோது அது ஒரு மனித உருவம். கறுத்த பெரிய கம்பளியை உடலில் போர்த்தி காது தலை முழுக்க மப்ளர் சுற்றிக் கட்டிய நபர் தான் அது.

அவர் எங்களுக்கு முதுகு காட்டி நின்றிருந்தார். மரத்தின் பக்கம் திரும்பி சுருட்டு பற்ற வைத்துக் கொண்டிருந்தார். ஆக அவர்தான் டோர்ச் வெளிச்சத்திற்கு சொந்தக்காரராக இருக்க வேண்டும். அப்படியானால் ஏன் டோர்ச்சை அணைத்து விட்டார்? வெளிச்சம் இருந்தால் தைரியமாக போக முடியுமே! என நினைத்து அருகில் சென்று அவரை அழைத்தோம்.

அண்ணே,.........

பதிலில்லை......

யாரு இங்க நிற்கிறது......

பதிலில்லை.

உங்கக் கிட்ட டோர்ச் லைற் இருக்கா.....

பதிலில்லை.

எங்களது இத்தனைக் கேள்விக்கும் அந்த நபரிடமிருந்து எந்த அசைவும் இல்லை. இதே கேள்விகளை நாங்கள் உரத்துக் கேட்டும் அவர் திரும்பிப்பார்க்கவும் இல்லை.

பின்னால் ஏதோ சத்தம் கேட்க இருவரும் ஒரே நேரத்தில் திரும்பினோம். நாம் மறுபடியும் திரும்பிப் பார்த்தபோது மரத்தடியில் அந்த நபரைக் காணவில்லை. அங்கே ஒரு உருவம் இருந்ததற்கான எந்த அடையாளமும் இல்லை. அப்படியானால் அந்த மனிதர் எங்கே சென்றிருக்க முடியும்?

இனம்புரியாத பயம் எங்களைச் சூழ்ந்து கொள்ள எங்களுக்கு அந்த குளிரிலும் வியர்த்துக் கொட்டியது.

நாங்கள் அங்கிருந்து சென்றால் போதும் என நினைத்துக் கொண்டு வேகமாக நடையைக் கட்டினோம்.

இதோ வீட்டை நெருங்கி விட்டோம். இன்னும் ஒரு 20 அடி தூரம் தான். ஒரு இருள் சூழ்ந்த வளைவு. அதைக் கடந்து விட்டால் வீடுதான்.

நாங்கள் அந்த வளைவை நெருங்கினோம். அப்போது பாதையின் ஓரத்தில் மீண்டும் அதே உருவம்.

கறுத்த பெரிய கம்பளியை உடலில் போர்த்தி காது தலை முழுக்க மப்ளர் சுற்றிக் கட்டிய அதே நபர். முன்பு நாம் கண்ட அதே தோற்றத்தில் சுருட்டுப் பற்ற வைத்துக் கொண்டிருந்தார்.

இருவரும் மந்திரத்தில் கட்டுண்டது போல அந்த நபரையே பார்த்துக் கொண்டிருந்தோம்.

இந்த முறை நாங்கள் எதுவும் கேட்காமலேயே அந்த உருவம் எங்களை நோக்கித் திரும்பியது.

முகத்தில் கண், மூக்கு, வாய் எதுவுமே தெரியவில்லை. கறுப்பு நிறம் மாத்திரமே தெரிந்தது.

எங்களை நோக்கி நிதானமாக வந்தது.

அருகில் மிக அருகில் வந்தது.

அப்போதும் எங்களுக்கு அந்த உருவம் யார்? மனித உருவமா என்று கூட அடையாளம் தெரியவில்லை.

நிதானமாக மிக நிதானமாக அருகில் வந்த அந்த உருவம் மிக அருகில் வந்து நின்றது..

சட்டென எங்களைக் கடந்து சென்றது.

மறுகணம் இருவரும் மயக்கமடைந்து கீழே விழுந்தோம்.

இந்தச் சம்பவம் என்வாழ்நாளில் மறக்க முடியாத பதிவானது.

தகவல் தொகுப்பு - அமி




Colour: Magenta Yellow Black